# போதகர் கையேடு

## ஆராதனை ஒழுங்குகளும் அதற்கேற்ற பிரசங்க குறிப்புகளும்

திருமறை அறிஞர்
Rev. Dr. A. கிறிஸ்டோபர்

# போதகர் கையேடு

(ஆராதனை ஒழுங்குகளும்,
அதற்கேற்ற பிரசங்க குறிப்புகளும்)

தொகுப்பு, பதிப்பாசிரியர்
திருமறை அறிஞர்
**Rev. Dr. A. கிறிஸ்டோபர்**, M.A., D.D.,

வெளியிடுவோர்
**விண்ணக அப்பம்**
2, நேருவீதி, சூரம்பட்டி,
ஈரோடு - 638 009.

FIRST EDITION - October 2007
TOTAL COPIES - 2000
COPY RIGHT - TO AUTHOR
PRICE - Rs. 40.00 (IN INDIA)
BOOK NUMBER - T - 55

FOR DETAILS CONTACT
**WINNAGA APPAM**
No. 4/2, NEHRU STREET, SOORAMPATTI,
ERODE - 638 009. S.INDIA.
PHONE : (0424) 2271323 (Off)
Fax : (0424) 2277286
e-mail : winnagaappam@rediff.com

## என்னுரை

என் இனிய ஊழியர்களே! இரட்சகர் இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். போதகர் கையேடு என்ற நூலினை உங்களுக்கு வழங்குவதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

என் புத்தகத்தை வாசித்த பல போதகர்கள் ஆராதனை ஒழுங்குகளை உள்ளடக்கிய ஒரு வழிகாட்டி நூலினை வெளியிட வேண்டுமென்று தொடர்ந்து வற்புறுத்தி வந்தனர். எனினும் நான் அதற்காக ஆர்வம் காட்டவில்லை. காரணம் ஆங்கிலிக்கன் திருச்சபை, தென்னிந்திய திருச்சபை போன்ற பாரம்பரிய மிக்க திருச்சபைகளின் ஆராதனை ஒழுங்கு புத்தகங்கள் பரவலாக கிடைக்கின்றன. மேலும் தமிழகத்தில் மூத்த ஊழியரான பாஸ்டர். ராஜாமணி அவர்களின் ஆராதனை ஒழுங்குகள் என்ற புத்தகம் மிகச்சிறப்பான முறையில் அச்சிட்டு எல்லா நூல் நிலையங்களிலும் தாராளமாய்க் கிடைக்கின்றன. அஃதினை நானே வாங்கி பல ஊழியர்களுக்கு பரிசாகத் தந்துள்ளேன்.

ஒரு ஆராதனையில் அந்த புத்தகத்தை ஒருவர் பயன்படுத்திய போது தான் எனக்கு ஒரு குறிப்பிட்ட காரியம் புலப்பட்டது. ஒரு குறிப்பிட்ட நிகழ்வில், நபர்களின் பெயர் வரவேண்டிய இடத்தில் ............... என்று அச்சிட்ட அப்புத்தகத்தில் சபையின் பெயர் வரவேண்டிய இடத்தில் தென்னிந்திய தேவ சங்க சபை என்று அச்சிடப்பட்டிருந்தது. அதை அந்தப் போதகர் அப்படியே வாசித்தார். உண்மையில் அவர் அந்த ஐக்கியத்தைச் சார்ந்தவரல்ல, தங்கள் ஸ்தாபனத்திற்காக ஆயத்தமாக்கப்பட்ட அவ்வாராதனை ஒழுங்குமுறைப் புத்தகத்தை எல்லா



ஊழியர்களும் பயன்படுத்தட்டுமே என்ற பரந்த மனதுடன் அதை பொது விநியோகத்திற்கு வழங்கியுள்ளார் என்று எனக்குப் புரிந்தது. ஐயா அவர்களுக்கு தமிழ்க் கிறிஸ்தவம், நன்றி சொல்ல கடமைப்பட்டிருக்கிறது.

இந்நிலையில் எல்லா சபைப்பிரிவினரும் தடுமாற்றமின்றி பயன்படுத்தக்கூடிய ஆராதனை ஒழுங்குகளை உள்ளடக்கிய போதகர் கையேடு ஒன்றினை வெளியிட வேண்டியது அவசியம் என உணர்ந்தேன். அதன் விளைவே இந்தக் கையேடு.

இதில் நான்கு பகுதிகள்; ஆராதனை ஒழுங்குகள், மாதிரிப்படிவங்கள், அந்த சிறப்பு ஆராதனைகளுக்குரிய பிரசங்கக் குறிப்புகள். அதற்கான பாடல்கள் என்று தனித்தனியே அளிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஆராதனை ஒழுங்குகளை சொல்லுவதற்கு முன்பாக முன்னோட்டம் என்று அவ்வாராதனையின் சூழலைக் குறித்து அறிமுக வார்த்தைகளை எழுதியுள்ளேன். இவைகளை வாசித்து, முறையாகப் பயன்படுத்தினால் நீங்கள் நடத்தும் ஆராதனைகள் சிறப்பாக இருக்குமென்பதில் ஐயமில்லை.

பாஸ்டர்
அ. கிறிஸ்டோபர்

# உள்ளதை சொல்கிறேன் !
# உள்ளத்தில் உள்ளதை சொல்கிறேன் !!

இனிய போதகர்களே! ஊழியர்களே! நமது தேவன் ஒழுங்கின் தேவன், நேர்த்தியாய் சகலத்தையும் நடப்பிக்கிற தேவன். அவருடைய செய்கைகளில் ஒரு சீரான வரிசை முறையும் ஒழுங்குமுறையும் இருக்கிறதை வேதத்திலுள்ள பலபகுதிகள் நமக்கு விளக்கி காட்டுகின்றன. ஆதியாகமம் முதல் அதிகாரத்தில் ஒவ்வொரு நாளாய் சிருஷ்டிப்பில் கிரியைகள் நடப்பித்து ஏழாம் நாளில் நிறைவு செய்தார் என்றும், நமது இரட்சகராகிய கிறிஸ்து இயேசு வனாந்தரத்தில் மக்களை வரிசையாக அமர வைத்த பின்னர் (50 X 100) அற்புதம் செய்தாரென்றும் வேதம் நமக்கு சொல்கிறது.

தேவனும், நம்மிடத்திலும் நாம் நடத்துகிற ஆராதனைகளிலும், ஒழுங்கையும், வரிசைக் கிரமத்தையும் எதிர்பார்க்கிறார் என்பது உண்மை. ஆராதனை ஒழுங்கு முறைகள், நிகழ்ச்சி நிரல்கள் போன்றவை பாரம்பரியங்களுக்கு அடுத்தவைகள் என்று எண்ணி அலட்சியப்படுத்தக்கூடாது. அவைகளின் பின்னே ஆசீர்வாதங்களும், அற்புதங்களும் இருக்கிறதை நீங்கள் உணர வேண்டும். யாத்திராகமம் நாற்பதாம் அதிகாரத்தை வாசித்துப் பாருங்கள். வரிசைக் கிரமமாக, ஒவ்வொரு காரியத்தையும், ஆசரிப்புக் கூடார வேலையில் மோசே செய்து முடித்தார். “**இவ்விதமாய்** மோசே வேலையை முடித்தான், கர்த்தருடைய மகிமை ஆசரிப்புக் கூடாரத்தை நிரப்பிற்று” என்று எழுதப்பட்டுள்ளது.

ஆம்! வரிசைக் கிரமமாக நாம் நடத்துகிற ஒவ்வொரு



ஆராதனையின் முடிவிலும் கர்த்தரின் மகிமையின் நிறைவைக் காண முடியும்.

நம்முடைய வழக்கமான சபைக் கூடுகைகளுக்கு நம்முடைய சபையைச் சார்ந்த, நம்மை அறிந்த மக்களே பெரும்பாலும் வருகின்றனர். எனவே நாம் எப்படி ஆராதனையை மாற்றி அமைத்தாலும், எந்தப் பாதிப்பும் நமக்கு வரப்போவதில்லை. ஆனால் சிறப்பு ஆராதனைகள் மற்றும் பொது நிகழ்வுகளின் போது பல்வேறு சபைப்பிரிவினர் மட்டுமல்ல பல்வேறு மதப்பிரிவினர்களும் வரக்கூடும். அங்கே நம்முடைய ஒவ்வொரு அசைவுகளும் ஒவ்வொரு வார்த்தைகளும் கூர்ந்து கவனிக்கப்படும் – விமர்சிக்கப்படும். எனவே இப்படிப்பட்ட சமயங்களில் நேர்த்தியாகவும் கர்த்தருடைய நாமத்திற்கு மகிமையாகவும் ஆராதனைகளை நடத்த வேண்டியது அவசியம்.

இதைக் குறித்தெல்லாம் வேதாகமக் கல்லூரிகளில் சொல்லித் தருவது உண்மைதான். செய்முறை பயிற்சி வகுப்புகள் கூட நடத்தப்படுகிறது. ஆனால் படித்து முடித்துவிட்டு வெளியே வருகிறவர்கள், பயிற்சி ஊழியராகப் பல ஆண்டுகள் ஒரு தலைவரின் கீழ் இருப்பதால், தான் படித்ததை பயன்படுத்த வேண்டிய நிலை அவருக்கு கிட்டாததால் படித்ததை மறக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது, இது ஒரு பக்கம்.

கர்த்தர் ஊழியத்திற்கு அழைக்கும் பொழுது வேதக் கலாசாலைக்குச் செல்லக்கூடிய கால அவகாசம் கிட்டாமல் நேரடியாய் ஊழியத்திற்கு வந்துவிட்டபடியால் இப்படிப்பட்ட பயிற்சிகளை பெறமுடியாமல் போய்விட்ட நிலை, இது ஒரு பக்கம்.

இப்படிப்பட்டவர்களின் நிலைகளை கருத்தில் கொண்டு தான் இப்புத்தகத்தை வடிவமைத்திருக்கிறேன். ஒவ்வொரு பொது நிகழ்வுகளின் போதும் மென்மையான, மேன்மையான

அணுகுமுறைகளை நாம் கையாள வேண்டியது அவசியம். நாம் செய்கிற சிறிய தவறுகளினால் நாம் நகைப்புக்குரியவர்களாக சில வேளைகளில் மாறிவிடுவது மட்டுமல்லாமல், சில வேளைகளில் பகையைக் கூட சம்பாதித்துக் கொள்ள வேண்டிய நிலை ஏற்படும்.

இந்த நிலையைத் தவிர்க்கும் படியாகத் தான் முன்ஆயத்தங்களையும் ஆராதனை ஒழுங்குகளையும் முக்கியப்படுத்துகிறோம். ஒவ்வொரு நிகழ்ச்சிகளுக்கும் ஏற்ற வேதப்பகுதிகளை தேர்வு செய்வது போல் பாடப்போகிற பாடல்களையும் தேர்வு செய்ய வேண்டியது அவசியம்.

ஒரு முறை ஒரு திருமண ஆராதனையில் நடைபெற்ற உண்மைச் சம்பவம் இது. திருமணத்தை நடத்தி முடித்துவிட்டு மணமக்களிடம் பதிவேட்டில் கையெழுத்து வாங்குகிற வேளை, பக்கத்திலிருந்த போதகரை பாடல் பாடச் சொன்னேன். அவர் என்ன பாடல் பாடினார் தெரியுமா?

“கட்டப்பட்ட மனிதரெல்லாம்
கட்டவிழ்க்கப்பட வேண்டும்”

அவ்வளவுதான் அங்கு வந்திருந்த அத்தனை பேர்களுடைய கண்களும் விரிந்து பார்க்கலாயின. நான் நிலைமையைப் புரிந்து கொண்டு செய்கை காட்டி பாடலை நிறுத்தி வேறு பாடலை பாடச் சொன்னேன். அதை அவர் புரிந்து கொண்டு பாடலை நிறுத்திவிட்டு, வேறு பாடலை ஆரம்பித்தார். என்ன பாட்டு தெரியுமா?

“ வாழ்க்கை என்பது போராட்டமே
நல்லதொரு போராட்டமே”

அவ்வளவு தான் விரிந்த கண்கள் எரிக்கும் கண்களாயின. நிலைமையை புரிந்து கொண்ட நான், சபையாரை எழுந்து நிற்க வைத்து “ஆசீர்வதியும் கர்த்தரே” பாடலைப் பாட வைத்து



ஒருவழியாய் ஆராதனையை சமாதானமாய் நிறைவு செய்தேன்.

சமீபத்தில் ஒரு திருமணத்திற்கு செய்தியளிக்க அழைக்கப் பட்டிருந்தேன். செய்திக்கு நான், திருமணப் பதிவாளர் மற்றொருவர், சபைப் போதகர் ஒருவர், ஆராதனையை நடத்துவதோ அவ்வைக்கியத்தின் மத்திய தலைமைப் போதகர்.

குறிப்பிட்ட நேரம் வந்தது. மணப்பெண் ஆயத்தமா? என்று சம்மந்தம் இல்லாத ஒருவரை விசாரித்துவிட்டு, ஆராதனையை தொடங்கி விட்டார். “ஏதேனில் ஆதிமனம்” என்ற பாடலைப் பாடுவோம் என்றார். பாடல் குழுவினரோ இன்னும் ஆயத்தமாக வில்லை. கூட்டத்திலிருந்த ஒரு மூத்த தாயார் “ஏதேனில் ஆதிமனம்” என்ற பாடலை பழைய ராகத்தில் உச்ச ஸ்தாயியில் ஆரம்பித்து விட்டார். பாடினோம் பாடினோம் இரண்டு முறை அப்பாடலைப் பாடினோம். தேடினோம் தேடினோம் மணமகள் எந்தப்பக்கம் வருகிறாள் என்று தேடினோம்.

அப்பொழுதுதான் ஒருவர் சொன்னார், “ஐயா, மணப்பெண் ரெடி தான், அவர் காரில் வந்து கொண்டிருக்கிறார்; இன்னும் வந்து சேர பத்து நிமிடங்கள் ஆகும்”. என்ன செய்வது, எல்லோரையும் உட்கார வைத்தார்கள். தந்தை பெர்க்மான்ஸின் “தேவனுக்கே மகிமை” என்ற பாடலை பாட வைத்தார்கள். (பத்து நிமிடத்திற்கு ஏற்ற பாட்டு)

மணப்பெண் வந்துவிட்டார், மீண்டும் எழுந்து நின்றோம் “ஏதேனில் ஆதிமனம்” பாடல், புதிய ராகத்தில் பாடினார்கள். என் வாழ்நாளிலே ஒரே கலியாணத்தில், ஒரே பாடலை இரண்டு விதமான ராகத்தில் மூன்று முறை பாடியது இந்தக் கலியாணத்தில்தான். திருமணத்திற்கு வந்த மற்ற சபையார், மற்ற மார்க்கத்தார் என்ன நினைத்திருப்பார்கள் என்பதை யோசித்துப் பாருங்கள். சரியான முன் ஆயத்தமில்லாமையை இது காட்டுகிறதல்லவா?

"இந்தியக் கிறிஸ்தவம்" என்பது சற்று வித்தியாசமானது. இங்கே கலாச்சாரத்திற்கடுத்தவைகளும் ஒட்டிக்கொண்டே வரும். பொது நிகழ்ச்சிகளில், இவைகளை மென்மையாக கையாள வேண்டும். சில காரியங்களுக்குப் பின்னால் மனித நேயம் இருக்கும். அவைகளை அனுமதிக்க வேண்டும். சில காரியங்களுக்குப் பின்னால் அந்நிய மார்க்கங்களின் பழக்கங்களும் இருக்கும். அவைகளை ஞானமாய் வெட்டிவிட வேண்டும்.

தர்க்கங்கள், விளக்கங்கள் ஆகியவற்றை பொது இடங்களில் அதுவும் நிகழ்ச்சி நேரங்களில் வைத்துக் கொள்ளக் கூடாது. ஒருமுறை எனது சபையைச் சார்ந்த வயதான தாயார் மரித்துவிட்டார். அவருக்கு கணவரோ, பிள்ளைகளோ கிடையாது, உறவினர் அத்தனை பேரும் இந்துக்கள்.

ஆனாலும் எப்படியோ, கிறிஸ்தவ முறைப்படி அடக்கம் செய்ய உறவினர்கள் ஒத்துக் கொண்டார்கள். பிரேதத்தை கல்லறைக்கு கொண்டுபோய் விட்டோம். இங்கே ஜெபம் நடக்க நடக்க அங்கே இரண்டு கோஷ்டிகள் சண்டை ஆரம்பித்து விட்டது.

மரித்த தாயாரின் நெருங்கின உறவினர்களில் இருவர் "நான்தான் மண் போடுவேன்" என்று ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக் கொண்டிருந்தார்கள்.

நானோ ஜெபித்து பிதா, குமாரன், பரிசுத்தாவியின் நாமத்தில் அடக்கம் பண்ணுகிறேன் என்று சொல்லி கையில் பிடித்திருந்த மண்வெட்டியிலிருந்த மண்ணை குழியில் போட்டுவிட்டேன். அவ்வளவுதான் இரண்டு கோஷ்டிகளும் ஒன்றாய் சேர்ந்து கொண்டு "நீ எப்படி மண்ணைப் போடுவாய் " என்று என்மேல் பாய ஆரம்பித்து விட்டனர்.

என்னோடிருந்த சபையார் எல்லோரும் ஆடிப்போய்



விட்டனர். நான் ஒன்றும் அசையவில்லை. போராட்ட தலைவனைப் பார்த்து, "நண்பா! நீ சொல்லுவதுதான் சரி; நீ தான் மண்ணைப் போட வேண்டும். நான் மண்ணைப் போடவில்லை, கிறிஸ்தவ பூஜை சடங்குதான் பண்ணினேன். உன் இஷ்டம் போல மண்ணைப் போடு என்று சொல்லிவிட்டு புறப்பட்டு விட்டேன்". பிரச்சினை முடிந்தது. நான் காரில் ஏறும்வரை இவர்தான் நல்ல ஃபாதர் என்று புகழ்ந்து கொண்டேயிருந்தார்.

கிராமப்புறங்களில் இப்படிப்பட்ட பொது நிகழ்ச்சிகளில் விட்டுக் கொடுத்தலும், இசைந்து போகுதலும் அவசியம். இப்படித்தான் செய்வேனென்று, அழுத்தமாக நின்று காரியத்தை கெடுத்து விடுவதுடன், ஊர்ச்சண்டைக்கும் மதக்குழப்பத்திற்கும் நாம் காரணிகளாய் மாறக்கூடாது.

குழந்தை பிரதிஷ்டையின் போது தகப்பனிடத்திலிருந்து குழந்தையை வாங்கின பிறகு ஜெபித்து தாயிடம் கொடுப்பதா? அல்லது தாயிடமிருந்து வாங்கி தந்தையிடம் கொடுப்பதா? என்ற அதிகப்பட்ச ஆராய்ச்சி செய்ய வேண்டிய அவசியமில்லை. இவைகளெல்லாம், குழப்பமின்றி புரிந்து கொண்டு செயல்படுவதற்காக நாமே ஏற்படுத்திக் கொண்ட புரிந்துணர்வு திட்டம்.

நான், இப்புத்தகத்தில் பிரதிஷ்டை ஜெபத்திற்குப்பிறகு குழந்தையை போதகர் தாயிடம் ஒப்படைக்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளேன். இது சட்டமல்ல.

குழந்தை வளர்ப்பில் தகப்பனைவிட, தாய்க்கு பொறுப்பு அதிகம். மனோவாவிடத்தில் பிள்ளையை "நான் சொன்னபடி வளர்ப்பதற்கு ஸ்திரீயானவள் எச்சரிக்கையாய் இருக்கக்கடவள்" என்று தூதனானவர் சொன்னதையும், "உன் தாயின் போதகத்தை தள்ளாதே" என்று நீதிமொழிகளிலில்

சொல்லப்பட்டிருப்பதையும், கருத்தில் கொண்டு குழந்தையை தாயிடம் கொடுப்பதே நன்று என எண்ணி அப்படி எழுதியுள்ளேன் அவ்வளவே.

இப்புத்தகம் சட்டநூல் அல்ல, வழிகாட்டி நூல் மாத்திரமே. எனவே இதில் சொல்லப்பட்டவைகளை வரைவுக் குறிப்புகளாக எடுத்துக் கொண்டு, கர்த்தர் உங்களுக்குக் கொடுத்துள்ள தாலந்தையும், வேத அறிவையும், மொழி அறிவையும் பயன்படுத்தி மிகச்சிறப்பான ஆராதனையை மக்களுக்கு வழங்குங்கள். மக்களும் மகிழ்ச்சியடைவார்கள், கர்த்தரும் மகிமைப்படுவார்.

மேலும் நீங்கள் ஸ்தாபனத்திற்கு உட்பட்ட ஊழியராக இருந்தால், உங்கள் ஸ்தாபனத்தின் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு இந்நூலில் சொல்லப்பட்டவைகளை மாற்றி அமைத்து கவனமாக ஆராதனை ஒழுங்குகளை கடைபிடிக்க வேண்டும். அப்படிச் செய்தால் மக்களுக்கு முன்பாக மாத்திரமல்ல உங்கள் ஆவிக்குரிய தலைவர்களுக்கு முன்பாகவும் சிறந்த ஊழியர்களாக கருதப்படுவீர்கள்.



# ஆராதனைகள்

1. குழந்தைப் பிரதிஷ்டை
2. திருமுழுக்கு
3. திருவிருந்து
4. திருமண நிச்சயம்
5. திருமணம்
6. வீடு பிரதிஷ்டை
7. ஆலயப் பிரதிஷ்டை
8. அடக்க ஆராதனை
9. ஆறுதல் கூட்டம்
10. மகப்பேறு

# 1
# குழந்தைப் பிரதிஷ்டை

**முன்னோட்டம் :**

நமது சபை ஒழுங்கின்படி சிறுபிள்ளைகளுக்கு ஞானஸ்நானம் கொடுப்பதில்லை. ஆனால் மாற் 10 : 16 வசனத்தின்படி சிறுபிள்ளைகளை கர்த்தருடைய சமூகத்தில் பிரதிஷ்டை செய்து, கைகளை வைத்து ஆசீர்வதிக்கிறோம். இது ஞானஸ்நானத்திற்கு இணையானதோ, பெயர் சூட்டு விழாவோ கிடையாது. அதே வேளையில் குழந்தைப் பிரதிஷ்டையோடு, அக்குழந்தைக்கான பெயர் வைத்து ஜெபிப்பதில் தவறில்லை. அது சிறந்ததே. குழந்தைப் பிரதிஷ்டை அதிகபட்சமாக திருச்சபைக்குள் நடப்பதுதான் நல்லது. சில விசேஷித்த நிகழ்ச்சிகள் நிமித்தம், ஆலயத்திற்கு வெளியேயும் நடைபெறலாம்.

**முன்னேற்பாடுகள் :**

பிரதிஷ்டை செய்யப்பட வேண்டிய குழந்தையின் பெற்றோர் குழந்தையோடு வரும்படியாக ஆலோசனை சொல்ல வேண்டும். மேலும் குழந்தைக்கு வைக்க வேண்டிய பெயரை, குழந்தையின் பெற்றோரே வெள்ளைத் தாளிலோ அல்லது அச்சடிக்கப்பட்ட படிவத்திலோ பூர்த்தி செய்யச் சொல்லி வாங்கிக் கொள்ள வேண்டும்.

**பொருத்தமான வேத பகுதிகள் :**

நியா 13 : 12-14; ஏசா 8 : 18; சங் 127 : 4; லூக் 18 : 16,17

**குழந்தை பிரதிஷ்டை ஆராதனை :**

**போதகர் (சொல்ல வேண்டியது) :**

நமது திருச்சபையின் அங்கமாகிய ---- தம்பதியினர்



கர்த்தர் தங்களுக்கு கிருபையாய் அளித்த ஆண் / பெண் குழந்தையை கர்த்தருக்கு பிரதிஷ்டை செய்யும்படி வந்திருக் கிறார்கள். சபையார் பாடல் பாடும் பொழுது பெற்றோர் குழந்தையுடன் பீடத்தினிடம் வந்து நிற்கும்படி கேட்டுக் கொள்கிறேன். (பாடல் பாடும்பொழுது அவர்கள் பீடத்திடம் வர வேண்டும்).

**போதகர் (செய்ய வேண்டியது)**

தேர்ந்தெடுக்கப்பட்ட ஏதாவது பொருத்தமான வேதபகுதி ஒன்றினை வாசித்து, குழந்தை வளர்ப்புக்கேற்ற அறிவுரைகளை ஐந்து நிமிடத்திற்குள் சொல்லி முடிக்க வேண்டும். பின்னர் பெற்றோரிடம் வாக்குறுதி கேட்க வேண்டும்.

**வாக்குறுதி :**

1. இந்தக் குழந்தையை கர்த்தரே உங்களுக்கு கொடுத்தார் என்றும் இந்தக் குழந்தையை கர்த்தருக்கென்று வளர்க்க வேண்டிய பொறுப்பு உங்களுக்கு உண்டென்றும் நீங்கள் அறிந்து அப்படி செய்வோம் என்று வாக்குக் கொடுக்கின்றீர்களா?

2. பெற்றோராகிய நீங்கள் பேச்சிலும் செய்கையிலும் இந்தக் குழந்தைக்கு மாதிரியாக இருந்து, அதன் ஒவ்வொரு வளர்ச்சியிலும் அக்கரைக் காட்டி திருவசனத்தைப் போதித்து திருச்சபைக்கும் சமூகத்திற்கும் பயனுள்ள பாத்திரமாய் வளர்ப்போமென்று வாக்குக் கொடுக்கின்றீர்களா?

(அவர்கள் சம்மதம் தெரிவித்த பின்பு சபையாரை முழங்கால் படியிடச் செய்து தகப்பனிடத்திலிருந்து குழந்தையை வாங்கி, குழந்தையை ஆசீர்வதித்து ஜெபிக்க வேண்டும்)

**ஜெபத்தில் சொல்ல வேண்டியது :**

...... இந்தக் குழந்தையை பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே பிரதிஷ்டை செய்து, ஆசீர்வதித்து -----

என்று பெயர் வைக்கிறேன், (என்று சொல்லி ஜெபத்தை முடிக்க வேண்டும்)

(பின்னர் குழந்தையை தாயினிடத்தில் ஒப்படைக்க வேண்டும்)

# 2

# திருமுழுக்கு

**முன்னோட்டம் :**

ஞானஸ்நானம் என்பது மதமாற்றத்திற்குரிய சடங்கோ திருச்சபையில் சேருவதற்கான ஒன்றோ, என்ற எண்ணம் இராதபடி அது தேவனுடைய நீதி, தேவனோடு செய்து கொள்ளும் உடன்படிக்கை என்பதை தெளிவு படுத்த வேண்டும். பொதுவாக மூன்றிலிருந்து ஆறுமாத காலம் வரை சபைக்கூடுதல்களில் அவரைக் கலந்து கொள்ளச் செய்து அவருக்குள் ஏற்படுகிற மாற்றத்தை கூர்ந்து கவனிக்க வேண்டும். அவருடைய இரட்சிப்பை உறுதி செய்து கொண்ட பிறகே ஞானஸ்நானத்திற்கு ஒழுங்கு செய்ய வேண்டும்.

**முன்னேற்பாடு :**

1. மீண்டும் ஒருமுறை திருவசனத்தை எடுத்துச் சொல்லி ஞானஸ்நானத்தைக் குறித்த அறிவை தெளிவாக ஊட்ட வேண்டும்.

2. ஞானஸ்நானம் கொடுப்பவர் – எடுப்பவர் தேவையான மாற்று வஸ்திரங்கள் சரியாய் இருக்கிறதா என்று சோதித்துக் கொள்ள வேண்டும்.

3. ஆணானாலும் பெண்ணானாலும் தண்ணீரிலிருந்து வெளியேறும்பொழுது நனைந்த உடைகளினால் விரசமாக தோற்றமளிக்கக் கூடுமென்று உணருவீர்களானால் அவர்களை



போர்வையால் மூடி அழைத்துச் செல்லக்கூடிய உதவியாளர் களை ஏற்படுத்த வேண்டும்.

4. ஞானஸ்நானத்தின்போது அவ்வப்பொழுது சரியான ராகத்தில் பாடக்கூடியவர்களை உடன் வைத்துக் கொள்ள வேண்டும்.

**ஆயத்தம் :**

ஞானஸ்நானம் கொடுக்கப்படுகிற நீர்நிலைகளில் மார்பு அளவுக்கு மேல் தண்ணீரின் ஆழம் இல்லாத அளவுக்கு பார்த்துக் கொள்ள வேண்டும்.

**திருமுழுக்கு ஆராதனை**

**பொருத்தமான வேத பகுதி :**

ரோம 6 : 3 – 11; 1 பேது 3 : 21; அப் 22 : 16; மாற் 16 : 16

**செய்முறை :**

சபையார் பாட்டுப்பாட போதகர் முதலில் தண்ணீரில் இறங்க வேண்டும். அவரைத் தொடர்ந்து ஒவ்வொருவராய் இறங்கி ஞானஸ்நானம் பெறவேண்டும்.

**வாக்குறுதி :**

அ. கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தினால் பாவங்களறக் கழுவப்பட்டு இரட்சிக்கப்பட்டேன் என்ற நம்பிக்கை உங்களுக்கு இருக்கிறதா?

ஆ. திருமறையில் சொல்லப்பட்ட வசனங்களுக்கும் திருச்சபையின் ஒழுங்குமுறைகளுக்கும் உண்மையாய் இருந்து ஜீவனுள்ளவரை பரிசுத்த வாழ்க்கை வாழ ஒப்புக்கொடுக் கிறீர்களா?

**அறிவிப்பு :**

சிறிய ஜெபத்திற்குப்பின் நீங்கள் சொன்ன வாக்குறுதியின் பேரில் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கட்டளைப் படியே பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே ........ ஆகிய உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கிறேன் என்று சொல்லி

அவரைத் தண்ணீரில் மூழ்க வைத்து தூக்கி நிறுத்த வேண்டும்.

**முடிவுரை :**

எல்லா நபரும் ஞானஸ்நானம் பெற்று முடிந்த பின்பு போதகர் தண்ணீரில் இருந்தபடியே கரங்களை உயர்த்தி சிறிய நன்றி ஜெபத்தை ஏறெடுத்து முடிக்க வேண்டும்.

**ஐக்கியப்படுத்துதல் :**

எல்லோரும் உடை மாற்றிக் கொண்டு வந்த பிறகு ஒரு பாடல் பாட வேண்டும். அதன்பின் ஞானஸ்நானம் பெற்றவர் களை, கர்த்தருடைய ஆராதனை, கர்த்தருடைய பந்தி இவை களில் தவறாமல் கலந்து கொள்ள அறிவுறுத்தி உங்கள் வலது கைகொடுத்து இன்று முதல் இந்த திருச்சபையில் அங்கமாக இருக்கின்றீர்கள் என்று ஒவ்வொருவரையும், ஐக்கியத்திற்கு உள்ளாக்கின பின்னர் ஜெபித்து ஆசீர்வாதம் கூறி முடிக்க வேண்டும்.

# 3

# திருவிருந்து

**(ஞாயிறு ஆராதனை பிரசங்கத்திற்குப் பிறகு ஆசரிப்பது நல்லது)**

**பொருத்தமான வேதப் பகுதிகள் :**

1 கொரி 11 : 23 - 33; யோவா 6 : 48 - 51; 6 : 53 - 57

**முன்னோட்டம் :**

இது கிறிஸ்து நமக்கு வைத்துவிட்டுப் போயிருக்கிற முன்மாதிரி. ஆதிசபை அதிமுக்கியப்படுத்திய ஒன்று. இஸ்ரவேலர் அனுசரிக்கிற பஸ்காவுக்கும் இதற்கும் மிகநெருங்கிய தொடர்பு உண்டு என்றாலும், அதி முக்கிய வித்தியாசம் உண்டு. அவர்கள் அந்த நாளையும் இரவையும் முக்கியப்படுத்தி நினைவு கூறகிறார்கள். நாமோ நாளையும் நேரத்தையும் நினைவு



கூறாமல் ''என்னை நினைவு கூறும்படி இதைச் செய்யுங்கள் '' என்ற நமது இரட்சகரின் வார்த்தையின்படி அவரையும் அப்போஸ்தலர்களின் வார்த்தையின்படி கிறிஸ்துவின் மரணத்தையும் நினைவு கூறுகிறோம். எனவே அப்பம் பிட்குதல், கர்த்தரின் பந்தி, என்கிற இந்த பரிசுத்த நியமத்தை எந்த நாளிலும், எந்த நேரத்திலும் திருவசனத்தின்படி ஆசரிக்கலாம்.

**முன் ஆயத்தம் :**

இந்த பரிசுத்தமுள்ள நியமத்தை உயர்நிலையில் ஆசரிக்க வேண்டும். எனவே தூய்மையான அதற்காக வைக்கப்பட்ட பாத்திரங்களை பயன்படுத்த வேண்டும். சுகாதாரமான முறையில் அப்பத்தையும், திராட்சை ரசத்தையும், ஜெபத்தோடு ஆயத்தம் செய்து, ஆராதனை சமயத்தில் அதற்கென்று ஏற்படுத்தப்பட்டுள்ள மேஜை / பீடத்தின் மேல் வைத்து நல்ல வெள்ளைத் துணியினால் மூடி வைக்க வேண்டும். பங்கேற்பவர்களுக்கு தேவையான அளவைவிட சற்று அதிகமாக அப்பத்தையும், இரசத்தையும் ஆயத்தம் செய்ய வேண்டும்.

**திருவிருந்து ஆராதனை :**

**போதகர் அறிவிக்க வேண்டியது :**

**அ)** "இப்பொழுது நாம் கர்த்தருடைய பந்தியை ஆசரிக்க இருக்கிறோம்". திருவசனத்தின்படி மூழ்கி ஸ்நானம் பெற்று கர்த்தரோடும், மனிதர்களோடும் நல் மனசாட்சியோடு இருப்பவர்கள், வரிசையாக அமரும்படி / முழங்காலிடும்படி கேட்டுக் கொள்கிறேன். பந்தியில் பங்கு பெறாதவர்கள் தயவு செய்து, ஆலயத்தின் பிற்பகுதி அல்லது முற்றத்தில் உள்ள நிழல் பந்தலில் அமைதலாக இருக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

**ஆ)** பாடல் (கல்வாரிப் பாடல்) அப்பொழுது விசுவாசிகள் வரிசைக்குள்ளாவார்கள், மற்றவர்கள் வெளியேறுவார்கள்.

**இ) வேதப்பகுதி :**

**ஈ) ஆராய்தல் :** "நம்மை நாம் நிதானித்து அறிந்தால் நியாயந் தீர்க்கப்படோம்" நாம் அபாத்திரமாய் போஜன பானம்

பண்ணாதபடிக்கு நம்மை நாமே ஆராய்ந்து, குற்றங்களை அறிக்கையிட்டு தேவனோடு ஒப்புரவு ஆவோம் என்று போதகர் கட்டாயமாக சொல்வதுடன், அவர்கள் ஆராய்ந்து, அறிக்கை செய்யும்படி அவர்கள் ஜெபநிலையிலிருக்க இரண்டு அல்லது மூன்று நிமிடம் அவகாசம் கொடுக்க வேண்டும்.

**உ) ஜெபம் :** (கொடுப்பவர், எடுப்பவர், அப்பம், இரசம் ஆகியவற்றை கர்த்தர் பரிசுத்தப்படுத்தி ஆசீர்வதிக்க, போதகர் அல்லது அவரால் கேட்டுக்கொள்ளப்படுபவர் ஜெபிக்க வேண்டும்).

**ஊ)** உதவிப் போதகர்கள் / உடன் ஊழியர்கள் அல்லது ஆயத்தமாக்கப்பட்ட மூப்பர்கள் பிரசங்க பீடத்திற்கு முன்வந்து நிற்க வேண்டும். (அங்கத்தினர்கள் குறைவாய் இருந்தால் இந்த வழக்கம் தேவையில்லை).

**எ) போதகர் :** அப்பத்தை எடுத்து உயர்த்திப் பிடித்து "இயேசு தாமே அப்பத்தை எடுத்து ஸ்தோத்திரம் பண்ணி, பிட்டு (போதகரும் பிட்க வேண்டும்) இது உங்களுக்காகப் பிட்கப்படுகிற என்னுடைய சரீரமாய் இருக்கிறது என்றார். அவரது சரீரத்தை நினைவு கூறும்படி இந்த அப்பத்தை வாங்கிப் புசியுங்கள்" என்று சொல்லி நேரடியாகவோ, உதவியாளர் மூலமாகவோ அப்பத்தை சபையாருக்குப் பிட்டுக் கொடுக்க வேண்டும். எல்லோருக்கும் பகிர்ந்தளிக்கப்பட்ட பின்பு "இயேசுவின் சரீரத்தை நினைவு கூறும்படி இந்த அப்பத்தை ஏகமாய்ப் புசிப்போம்" என்று அறிவித்து சபையாரை ஏகமாய்ப் புசிக்க வைக்க வேண்டும்.

**ஏ) போதகர் :** திராட்சரசம் உள்ள பாத்திரத்தட்டை கையில் எடுத்து இது உங்களுக்காக கல்வாரியில் சிந்தப்பட்ட கிறிஸ்து இயேசுவின் இரத்தத்திற்கு அடையாளமாக இருக்கிறது. வாங்கிப் பானம் பண்ணுங்கள் என்று சொல்லி முன்பு போல பகிர்ந்தளிக்க வேண்டும். எல்லோருடைய கைகளிலும் குப்பி கிடைத்ததென்று உறுதிப்படுத்திக் கொண்ட பின் "நம்முடைய இரட்சகராகிய கிறிஸ்து இயேசுவின் இரத்தம் நம்மை சுத்திகரிக்கும் என்று விசுவாசித்து



எல்லோரையும் பானம் பண்ண வைக்க வேண்டும்.

**ஐ) பாடல் :** (அப்பொழுது உதவியாளர்கள் காலி குப்பிகளை சேகரித்துக் கொண்டு வந்து போதகரிடம் ஒப்படைக்க வேண்டும்) பரலோக மகிழ்ச்சியூட்டும் பாடலைப் பாட வேண்டும்.

**ஒ) இறுதி ஜெபம் :** போதகர் ஜெபித்து, ஆசீர்வாதம் கூறி முடிக்க வேண்டும்.

ஓ) அந்தந்த சபையின் வழக்கத்தின்படி விசுவாசிகள் ஒருவருக்கொருவர் கைகொடுத்து அல்லது கட்டித்தழுவி, அல்லது பரிசுத்த முத்தம் கொடுத்து ஐக்கியத்தை வெளிப்படுத்தி, வாழ்த்திப் பிரிய வேண்டும்.

# 4

# திருமண நிச்சயம்

**பொருத்தமான வேத பகுதிகள் :**

ஆதி 24 : 10 - 31; ஆதி 19 : 7; எபி 13 : 4 - 6; சங் 45

**முன்னோட்டம் :**

(45 நிமிடத்திலிருந்து 60 நிமிடத்திற்குள் ஆராதனையை முடித்து விட வேண்டும்)

விவாகம் யாவருக்குள்ளும் கனமுள்ளது. இந்த மேன்மையான திருமணத்தின் ஆரம்ப அஸ்திபாரமே திருமண நிச்சயம். இது ஏறக்குறைய பாதி திருமணத்திற்குச் சமம். எனவே கூர்மையான கவனிப்புடன் திருமண நிச்சயத்தை நடத்த வேண்டும். ஆராதனைக்கு முன்பாகவே இரு வீட்டாரையும் அழைத்து, ஆயத்தங்களை கேட்டு அறிந்து கொள்ள வேண்டும்.

**முன் ஆயத்தம் :**

அவரால் கேட்டுக்கொள்பவரே செய்தி கொடுக்க வேண்டும். மணமகளின் போதகர் ஆராதனை நடத்த வேண்டும், போதகர்கள் அமர்வதற்கும், மாப்பிள்ளை, பெண் அமர்வதற்கும்

ஏகமாய்ப் பானம் பண்ணக்கடவோம்" என்று சொல்லி போதுமான இருக்கைகள், போதகர் பயன்படுத்த ஒரு மேஜையும், மாப்பிள்ளை வீட்டார் கொண்டு வரும் பரிசுப் பொருள்களை வைக்க மேஜை அல்லது அழகிய தரைவிரிப்புகள் ஆயத்தம் செய்யப்பட்டிருக்க வேண்டும்.

**நிச்சய ஆராதனை**

**1) ஆரம்ப ஜெபம் :**

**2) துதிப்பாடல்**

இப்பாடல் பாடும்பொழுது மணமகனின் வீட்டார் தாங்கள் கொண்டு வந்த பரிசுப்பொருளை ஆயத்தமாக்கப்பட்ட இடத்தில் வைக்க வேண்டும்.

**அறிவிப்பு : (பாடல் முடிந்தவுடன் போதகர் சொல்ல வேண்டியதாவது)**

பிரியமானவர்களே நாம் பெரிய மகிழ்ச்சியுடனும் எதிர்பார்ப்புடனும் அமர்ந்திருக்கிறோம். ............ ஊரிலுள்ள திருவாளர் ........... அவர்கள் தங்கள் அன்பு மகன் .......... அவர்களுக்கு நம்முடைய அன்புக்குரிய .......... அவர்களின் குமாரத்தி ........... அவர்களை திருமணம் செய்து வைக்க விரும்பி பெண் கேட்டு நிச்சயித்துக் கொள்ள இந்தப் பரிசுப் பொருட்களை கொண்டு வந்துள்ளார், எனவே பெண் வீட்டாருக்கு சம்மதமானால் பெண்ணுக்குரியவர் முன்பாக வந்து இந்தப் பரிசுப் பொருட்களை வாங்கிச் சென்று பெண்ணை ஆயத்தப்படுத்தி அழைத்து வரும்படி கேட்டுக் கொள்கிறேன்.

**செய்முறை :**

போதகரால் கேட்டுக் கொள்ளப்படுபவர் ஆசீர்வாத ஜெபத்தை ஏறெடுத்தப் பின்னர் போதகர் முதல் தட்டை எடுத்து மாப்பிள்ளை வீட்டு பிரதிநிதியிடம் கொடுக்க அவர் அதை பெண்



வீட்டுப் பிரதிநிதியிடம் கொடுப்பார், அதைத் தொடர்ந்து பெண் வீட்டார் மற்றப் பரிசுப் பொருட்களை உள்ளே எடுத்துச் சென்று சீக்கிரமாக பெண்ணை உடுத்தி சபைக்கு முன் அழைத்து வர வேண்டும். அதுவரை பாடல் குழுவினர் பாடல்களைப் பாட வேண்டும்.

**வாக்குறுதி :**

பெண் சபைக்கு முன்பாக வந்தவுடன், மாப்பிள்ளை யையும் பெண்ணையும் நிற்க வைத்து தனித்தனியே சம்மதத்தை வெளிப்படையாய்க் கேட்க வேண்டும்.

அ. செல்வன் .......... ஆகிய உங்களுக்கும் செல்வி ............ ஆகிய இவர்களுக்கும் ஒழுங்கு செய்யப்படும் இந்த திருமணத்திற்கு நீங்கள் மனப்பூர்வமாய் சம்மதிக்கிறீர்களா?

ஆ. செல்வி ............. ஆகிய உங்களுக்கும் செல்வன் ............ ஆகிய இவர்களுக்கும் ஒழுங்கு செய்யப்படும் இந்த திருமணத்திற்கு நீங்கள் மனப்பூர்வமாய் சம்மதிக்கிறீர்களா?

**நிச்சயித்தல் :**

அவர்கள் சம்மதம் தெரிவித்த பின்பு, நிச்சயத்திற்கு அடையாளமாக அவர்கள் கைகளிலிருக்கும் வேதாகமத்தை ஒருவருக்கொருவர் மாற்றிக் கொள்ளச் செய்து முழங்கால் படியிட வைத்து, ஊழியர்கள் கைகளை வைத்து ஆசீர்வதித்து ஜெபிக்க வேண்டும்.

**அறிவுரை :**

போதகரோ போதகரால் கேட்டுக்கொள்ளப்படுபவரோ வசன அடிப்படையில் இருபது நிமிடத்திற்கு மிகாமல் ஆலோசனையை செய்தியாக வழங்க வேண்டும்.

**ஆசீர்வாதம் :**

இறுதியாக ஜெபித்து ஆசீர்வாதம் கூறி முடிக்க வேண்டும்.

**நன்றி :**

பெண்வீட்டார், யாவருக்கும் நன்றி சொல்லி விருந்துண்ண அழைக்க வேண்டும். அப்படியே மணமகனும், மணமகளும் எழும்பி நின்று சபையாருக்கு வணக்கம் சொல்லி இடம் பெயர வேண்டும்.

# 5

# திருமணம்

**பொருத்தமான வேதபகுதிகள் :**

ஆதி 1 : 26 - 28; 2 : 18 - 24; எபே 5 : 21 - 33.

**முன்னோட்டம் :**

வேதத்தின்படியும் இந்திய கிறிஸ்தவ திருமணச் சட்டத்தின்படியும் மிக கவனமாக செய்யப்படவேண்டியது அவசியம். ஆலயத்திலோ அல்லது திருமண மண்டபங்களிலோ நடத்தப்படலாம். சூரிய உதயத்திற்கு பின்னும் சூரிய அஸ்தமனத் திற்கு முன்னும் இடைப்பட்ட நேரத்திற்குள் திருமணம் நடக்க வேண்டும். திருமணம் நடத்தும் அரசு உரிமம் பெற்ற ஒருவர் திருமணத்தை நடத்துவதே நெறியாகும்.

**முன்னேற்பாடுகள் :**

அ. மணமகன், மணமகள் ஆகியோர் முறையே 21,18 வயது நிரம்பியவரா என்பதை தகுந்த சான்றிதழ் பேரில் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

ஆ. மணமகன், மணமகள் ஆகியோரின் சொந்த சபைகளில் முறையான மூன்று திருமண தகுதி அறிவிப்பு வாசிக்கப்பட்டு, அப்போதகர்களால் தடையில்லை என்று கொடுக்கப்படுகிற சான்றிதழை முன்கூட்டியே பெற்றுக்கொள்ள வேண்டும்.

இ. திருமண பதிவேட்டில் அடித்தல், திருத்தல் இல்லாமல் எல்லாத் தகவல்களையும் கொட்டை எழுத்துக்களில் பூர்த்தி



செய்ய வேண்டும்.

ஈ. பெண்ணை கைப்பிடித்துக் கொடுப்பவர், சாட்சி கையொப்பமிடுபவர்கள், ஆகியோருக்கு முன்கூட்டியே ஆலோசனைக் கொடுத்து அழைக்கும்பொழுது உடனே வர ஆயத்தமாய் இருக்க வைக்க வேண்டும்.

**நிகழ்ச்சி நிரல் :**

1) தொடக்க ஜெபம்
2) பாடல் (அவ்வேளையில் மணப்பெண் அழைத்து வரப்பட வேண்டும்)
3) திருமண தகுதி அறிவிப்பு
4) ஜெபம்
5) பாடல்
6) வேதபாடம் (1) தேவைப்பட்டால் இன்னொரு வேதபகுதி வாசிக்கலாம்)
7) தேவ செய்தி
8) மணமக்களிடம் சம்மதம் கேட்குதல்
9) கைகளைப் பிடித்து வாக்குறுதி கொடுத்தல்
10) முழங்காலில் நிற்க வைத்து, ஊழியர்கள் ஆசீர்வதித்து ஜெபித்தல்
11) பாடலும், திருமணப் பதிவும்
12) கணவன், மனைவி என்று போதகர் அறிவித்தல்
13) ஜெபமும் ஆசீர்வாதமும்
14) நன்றியுரை (திருமண வீட்டார்)
15) பாடலும் மணமக்கள் பவனியாய் வெளியேறுதலும்

**திருமண ஆராதனை**

(நிகழ்ச்சி நிரலின்படி)

1) திருமண அரங்கில் போதகர்கள், மணமகன், சபையார்

மற்றும் விருந்தினர்கள் யாவரும் கூடிவந்தவுடன் போதகர் அல்லது அதற்கென குறிக்கப்பட்டவர் முதலாவது ஜெபத்தை ஏறெடுக்க வேண்டும். யாவரும் எழுந்து நிற்க ஒரு பாடல் பாடவேண்டும். அப்பொழுது மணமகளை அரங்கத்திற்குள் அழைத்துவந்து மணமகனின் இடப்பக்கத்தில் நிற்க வைக்க வேண்டும்.

**2) போதகர் சொல்ல வேண்டியது :**

திருமணம் யாவருக்குள்ளும் மேன்மையுள்ளதாய் இருக்கிறது. இது, மனிதன் பாவம் செய்வதற்கு முன்பாகவே தேவனால் ஏற்படுத்தப்பட்ட தூய ஒழுங்கு முறையாகும். இத்திருமணத்தைக் குறித்து ‘தேவன் இணைத்ததை’ என்றும் ‘தேவன் கணவன் மனைவிக்கு சாட்சியாய் இருக்கிறார்’ என்றும் வேதம் உயர்த்தி சொல்லுகிறது. மேலும், இத்திருமண நிகழ்வு கிறிஸ்துவுக்கும் அவருடைய சபைக்கும் உள்ள உறவை ஞானார்த்தமாய்க் காட்டுகிறது. இயேசு கிறிஸ்துவும் தமது முதலாவது அற்புதத்தை கலிலேயாவிலுள்ள கானாவூர் கலியாண வீட்டில் செய்து திருமணத்தை கனப்படுத்தியிருக்கிறார்.

எனவே திருமணம் என்பது உடல் ரீதியான இச்சைக்குரிய ஒன்று என்று எண்ணாமல் பரிசுத்தமான சந்ததியைப் பெறவும், கணவன், மனைவி ஒருவருக்கொருவர் அன்பைப் பகிர்ந்து கொண்டு மாம்சத்திற்குரிய கேடுகளுக்கு விலகி பரிசுத்தமாய் ஜீவிக்கவும் தேவன் ஏற்படுத்திய ஒழுங்கு என்பதை நீங்கள் யாவரும் அறிய வேண்டும்.

எனவே பிரியமானவர்களே! செல்வன்……………… அவர்களும் செல்வி …………… அவர்களும் கர்த்தருடைய சமூகத்தில் பரிசுத்தவான்கள் முன்னிலையில் திருமணத்தில் இணையும்படி வந்திருக்கிறார்கள். திருவசனத்திற்கும் திருநாட்டின்



சட்டத்திற்கும் ஏற்காத வகையில் நடப்பது முறையான திருமணம் அல்ல. எனவே இவர்களை இத்தூயத் திருமணத்தில் இணைக்கக் கூடாதபடிக்கு ஏதாகிலும் முகாந்திரம் உண்டு என்று நீங்கள் அறிவீர்களானால் அதை இப்பொழுதே எழுத்து வடிவத்தில் தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். (சிறிது இடைவெளி)

எதிர்ப்பு இல்லையென்றால் தொடர்ந்து போதகர் மணமக்களைப் பார்த்து சொல்ல வேண்டியது :–

நான் இதுவரை சொன்னதை நீங்களும் கேட்டீர்கள், இந்தத் திருமணத்தில் இணைக்கக் கூடாதபடி உங்களுக்குள்ளே யாதொரு தடை இருக்குமென்றால் அதை இப்பொழுதே சொல்லக் கடவீர்கள்.

மணமகன் : தடையில்லை

மணமகள் : தடையில்லை

போதகர் : இத்திருமணத்தை நடத்துவதற்கு தடையேது மில்லை என்று மௌனத்தின் மூலம் சபையாரும் வாய் மொழியாய் மணமக்களும் தெரிவித்த படியால் இத்திருமணத்தை நான் நடத்தி வைக்கப் போகிறேன். இன்று இத்திருமணத்தைக் குறித்து எந்தத் தடையும் சொல்லாதவர்கள், இனி வரும் நாட்களில் இதைக்குறித்து யாதொன்றும் சொல்லக் கூடாதென்று பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தில் கட்டளையிடு கிறேன்.

**4. ஜெபம் :**

**5. பாடல் :**

**6. வேத பாடம் :**

**7. செய்தி : இருபது நிமிடத்திற்கு மிகாமல்**

**8. சம்மதம் கேட்குதல் :**

**அ. போதகர் : (மணமகனைப் பார்த்து) :** …………… ஆகிய நீங்கள் ……….. ஆகிய இவர்களை இன்று முதல்

உங்களுடைய வாழ்க்கைத் துணைவியாக ஏற்றுக் கொண்டு அவர்களுடன் ஒருமித்து வாழவும் ஜீவன் இவரில் உள்ள வரை இவர் ஒருவருக்கு மாத்திரம் கணவனாக இருப்பேன் என்றும் வாக்குக் கொடுக்க ஆயத்தமாய் இருக்கிறீரா? மணமகன் ஆம் என்று சொல்ல வேண்டும்.

**ஆ. போதகர் :** (மணமகளைப் பார்த்து) ............. ஆகிய நீங்கள் .............. ஆகிய இவரை இன்று முதல் உங்கள் கணவனாக ஏற்றுக் கொண்டு அவருடன் ஒருமித்து வாழவும் ஜீவன் இவரில் உள்ள வரை இவர் ஒருவருக்கே மனைவியாக இருப்பேன் என்றும் வாக்குக் கொடுக்க ஆயத்தமாய் இருக்கிறீர்களா? மணமகள் ஆம் என்று சொல்ல வேண்டும்.

**போதகர் :** அப்படியானால் பெண்ணுக்குரியவர் சபைக்கு முன்பாக வந்து பெண்ணின் வலது கையைப் பிடித்து மணமகனின் வலது கையில் கொடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

(பெண்ணின் அப்பா அல்லது அண்ணன் அல்லது தாய்மாமன் போன்ற மிக நெருங்கிய உறவினர் இதைச் செய்ய வேண்டும்.)

**9. வாக்குறுதி :** (மணமக்கள் ஒருவர் கையை ஒருவர் பிடித்தவாறு நிற்க வேண்டும். போதகர் சொல்லச் சொல்ல வாக்குறுதி திரும்பச் சொல்ல வேண்டும்)

**மணமகனின் வாக்குறுதி :** ........... ஆகிய நான் ............ ஆகிய உங்களை இன்று முதல் என்னுடைய மனைவியாக ஏற்றுக் கொண்டு வாழ்விலும் தாழ்விலும், இன்பத்திலும் துன்பத்திலும், அன்பு பாராட்டி, போஷித்துக் காப்பாற்றி, பிறர் முகம் நோக்காமல் ஜீவன் உன்னில் உள்ள வரை உனக்கு மாத்திரம் நல்ல கணவனாக இருப்பேன் என்றும்,



கர்த்தர் எனக்கு அருளுகிற எல்லா உலக சொத்துக்களுக்கும், உன்னை பங்குள்ளவளாக்குவேன் என்றும் கர்த்தருடைய சமூகத்தில் பரிசுத்தவான்கள் முன்னிலையில் உனக்கு வாக்குக் கொடுக்கிறேன்.

**மணமகளின் வாக்குறுதி :** ............... ஆகிய நான்............ ஆகிய உங்களை இன்று முதல் என்னுடைய கணவனாக ஏற்றுக் கொண்டு வாழ்விலும் தாழ்விலும், இன்பத்திலும் துன்பத்திலும், உங்களிடத்தில் அன்பு பாராட்டி கீழ்ப்படிந்து பணிவிடை செய்வேன் என்றும், ஜீவன் உங்களில் உள்ள வரை பிறர்முகம் நோக்காமல் உம் ஒருவருக்கே மனைவியாய் இருந்து உங்களைக் கனப்படுத்துவேன் என்றும், கர்த்தருடைய சமூகத்தில், பரிசுத்தவான்கள் முன்னிலையில் உங்களுக்கு வாக்குக் கொடுக்கிறேன்.

10. முழங்காலில் நிற்க வைத்து ஊழியர்கள் ஆசீர்வதித்து ஜெபித்தல் (மூத்த ஊழியர் இருவரை ஆசீர்வதித்து ஜெபிக்க சொல்லலாம்)

11. பாடலும் திருமணப் பதிவும் :

1. மணமகன்
2. மணமகள்
3. சாட்சிகள் (மணமகனுக்காக)
4. சாட்சிகள் (மணமகளுக்காக)
5. சாட்சி (ஸ்தலப் போதகரின் கையொப்பம்)

**12. பிரகடனப்படுத்துதல் :** போதகர் சத்தமாக அறிவிக்க வேண்டியது : நான் சபையாருக்கு தெரிவிப்பது என்னவென்றால் சகோதரன்.............ம் சகோதரி..........ம் கர்த்தருடைய சமூகத்தில் ஒருவர் கையை ஒருவர் பிடித்து தேவ சமூகத்தில் உண்மையாக வாக்குக் கொடுத்து, தேச சட்டப்படி தங்கள் திருமணத்தை பதிவு செய்து கொண்டபடியால் இன்று முதல்

இவர்கள் இருவரும் கணவனும், மனைவியுமாய் இருக்கிறார்கள் என்று பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தில் அறிவிக்கிறேன். தேவன் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருக்கக்கடவன் ......... ஆமென்.

**13. ஜெபமும் ஆசீர்வாதமும் :** (போதகர் அல்லது குறிக்கப்பட்டவர்)

**14. நன்றியுரை :** (இருவீட்டார் சார்பாக)

15. சபையார் எழுந்து நிற்க வேண்டும் – பாடல் குழுவினர் பாடல் பாட வேண்டும்; மணமகனும், மணமகளும் பவனியாக சென்று அரங்கம் / ஆலயத்தை விட்டு வெளியேற வேண்டும்.

# 6

# புதுமனைத் திறப்பு மற்றும் பிரதிஷ்டை ஆராதனை

**முன்னோட்டம் :**

ஒருவர் வீட்டைக் கட்டி முடிப்பது என்பது கர்த்தருடைய பெரிய கிருபையே. அவரே வீடு வாசல்களை ஏற்படுத்துகிறார் என்றும் வீடும், ஆஸ்தியும் பிதாக்கள் மூலம் வருகின்ற சுதந்திரம் என்றும் வேதம் நமக்குச் சொல்கிறது. எனவே இந்த திவ்விய ஆசீர்வாதத்தைக் குறித்து கர்த்தருக்கு துதி ஸ்தோத்திரம் ஏறெடுப்பதுடன் அவ்வீடு ஆசீர்வாதமான வீடாய் இருக்க கர்த்தருக்கென்று அர்ப்பணித்து ஜெபிப்பது அவசியம்.

இதில் இரண்டு பகுதிகள் உண்டு. முதலில் வீட்டிற்கு வெளியே ஒரு சிறிய ஜெப ஆராதனை. இது திறப்பு விழாவிற்கானது. மற்றொன்று வீட்டிற்குள்ளே சிறப்பு ஆராதனை. இதுவே பிரதிஷ்டை ஆராதனை.

**முன் ஏற்பாடு :**



வீட்டினுள் இருக்கும் அனைவரையும் வெளியே வரச் செய்ய வேண்டும். ஒலி பெருக்கி அமைப்பாளர், புகைப்படக் கலைஞர் உட்பட ஒருவரும் திறப்பு விழா ஆராதனையின் போது வீட்டிற்குள் இருக்கக் கூடாது. வீட்டின் முகப்பு வாசலில் குறுக்கே வண்ண நிற ரிப்பன் கட்டி அல்லது ஒட்டி வைத்திருக்க வேண்டும்.

இந்த ரிப்பனை போதகர் அல்லது குடும்பத்தார் விருப்பப்பட்டால் அக்குடும்பத்தின் மூத்தவர் வெட்டி வீட்டை திறந்து வைக்கலாம். அதை முன்கூட்டியே திட்டமிடல் வேண்டும். யார் ரிப்பனை வெட்டினாலும், “கர்த்தருடைய நாமத்தின் மகிமைக்காக கர்த்தருடைய பிள்ளைகளாகிய இந்த வீட்டார் சுகித்து குடியிருக்கும் படியாகவும் பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே இந்த வீட்டை ஜெபத்தோடு (இப்பொழுது ரிப்பனை வெட்ட ஆரம்பிக்க வேண்டும்) திறந்து வைக்கிறேன்” என்று சொல்ல வேண்டும் என்று முன் கூட்டியே கற்றுத் தர வேண்டும்.

**திறப்பு விழா :**

அ) தொடக்க ஜெபம்

ஆ) ஸ்தோத்திர பாடல்

இ) விசுவாசிகள் கரங்களை உயர்த்தி துதித்தல்

ஈ) வீட்டை திறக்கப் போகிறோம் என்று போதகர் அறிவித்தல்

உ) முன் குறிக்கப்பட்டவர் சொல்ல வேண்டிய வார்த்தைகளை சொல்லி ரிப்பனை வெட்டி வீட்டைத் திறந்து வைத்தல்

ஊ) போதகர் முன் செல்ல அவரைத் தொடர்ந்து விசுவாசிகளும் வீட்டாரும் பின் தொடர்ந்து துதி பாடல்களைப் பாடிக் கொண்டே வீட்டின் எல்லா அறைகளிலும் நின்று கரங்களை உயர்த்தி கர்த்தரைத் துதிக்க வேண்டும்.

**பிரதிஷ்டை ஆராதனை :**

அ) அமர்ந்த நிலையில் இருக்கும் பொழுது துதிப்பாடல் பாட

வேண்டும்.

ஆ) பிரதிஷ்டை ஜெபம் (விசுவாசிகள் யாவரும் எழுந்து நின்று அவர்கள் கைகளை அவர்கள் இருக்கும் பக்கத்திலுள்ள வீட்டின் பகுதிகளில் வைத்து கொண்டு கர்த்தரைத் துதிக்க வேண்டும். அப்பொழுது மூத்த ஊழியர் சத்தத்தை உயர்த்தி கர்த்தருக்கு பிரதிஷ்டை செய்து ஜெபிக்க வேண்டும்.)

இ. எல்லோரும் அமர்ந்த நிலையில் இருக்கும் போது வீட்டின் தலைவர் சாட்சி மற்றும் வரவேற்புரை வழங்க வேண்டும்.

ஈ) வாழ்த்துரை (2 ஊழியர்கள் அல்லது வி.ஐ.பி. கள் தலா ஐந்து நிமிடம் பேசலாம்)

உ) வேத பாடம் (சங்கீதம் 128 அல்லது 2 சாமுவேல் 7 : 29, சங்கீதம் 147 : 12-15, சங்கீதம் 122 : 6, 7 சங்கீதம் 127)

ஊ) அருளுரை (போதகர் அல்லது அவரால் நியமிக்கப் பட்டவர் 20 நிமிடத்திற்கு மிகாமல் பிரசங்கிக்க வேண்டும்)

எ) இறுதியான ஜெபமும் ஆசீர்வாதமும்.

ஏ) நன்றி நவிலல் (குடும்பத்தில் மூத்தவர் நன்றி சொல்லி வந்தவர்களை விருந்து உபசரிப்புக்கு அழைக்க வேண்டும்.)

**குறிப்பு :** இப்படிப்பட்ட குடும்ப நிகழ்ச்சிகளில் குடும்பத்தைச் சார்ந்த ஊழியர்களையும் அவர்களால் அழைக்கப்பட்டவர்களையும் சபை பாகுபாடின்றி நிகழ்ச்சியில் பயன்படுத்தி நம்முடைய ஐக்கியத்தையும் பெருந்தன்மையையும் மற்றவர்களுக்கு முன்பாக வெளிப்படுத்த வேண்டும்.

# 7
# ஆலய பிரதிஷ்டை

**முன்னோட்டம் :**

என் மகிமையின் ஆலயத்தை மகிமைப்படுத்து



வேனென்றும், என்னுடைய வீடு எல்லா ஜனத்திற்கும் ஜெப வீடு எனப்படும் என்றும் இவ்விடத்தில் என் விழியும் செவியும் எந்த நாளும் திறந்திருக்கும் என்றும் கர்த்தர் சொல்லியிருப்பது குறிப்பிடத்தக்கது. எனவே தேவனுடைய ஆலயத்தைக் கட்டி பிரதிஷ்டை செய்வது என்பது மிக மகிழ்ச்சியான மகிமையான காரியமாகும்.

எனினும் நம்முடைய ஆலயம் கட்டப்படுதல் அரசு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள சட்டத்தின்படி அங்கீகாரிப்பைப் பெற்று கட்டுதல் அவசியம். மட்டுமல்ல நம்முடைய வழிபாட்டு நேரங்களில் அயலகத்தாருக்கு இடையூறு ஏற்படா வண்ணம், ஆலயத்தின் கட்டுமான பணி நவீன முறையில் நடைபெற வேண்டும். நமது பகுதியில் இந்த ஆலயம் இருப்பது நல்லது. நமக்கு பாதுகாப்பானது, ஆசீர்வாதமானது என்ற உணர்வு அப்பகுதியில் குடியிருப்போரின் உள்ளங்களில் உண்டாக்கப்பட வேண்டியது அவசியம்.

**முன் ஏற்பாடுகள் :**

ஆலய பிரதிஷ்டையின் போது இரண்டு பகுதிகள் உண்டு. ஒன்று ஆலயம் திறந்து வைத்தல். மற்றொன்று ஆலயத்தை பிரதிஷ்டை செய்தல். ஆலயத்திற்குள் இருக்கின்ற அனைவரையும் வெளியேற்ற வேண்டும். அதன் பிரதான வாசலின் குறுக்கே வண்ண நிற ரிப்பனை கட்டியோ ஒட்டியோ வைக்க வேண்டும். சிறிய தட்டில் சிறிய கத்தரி வைத்துக் கொண்டு நிற்க ஒருவரை ஏற்பாடு செய்ய வேண்டும்.

**திறப்பு விழா :**

**அ) கூடி வருதல் (ஆலயத்தின் முன்வாசலில் அனைவரையும் கூடி வரச் செய்ய வேண்டும்)**

**ஆ) ஜெபம்**

**(ஐக்கியத்தைச் சார்ந்த அல்லது அறிமுகமான**

**ஊழியரை ஜெபிக்கச் சொல்ல வேண்டும்.)**

**இ) அறிமுகம் (போதகர் சொல்ல வேண்டியது)**

கர்த்தருடைய பெரிதான கிருபையால் நம்முடைய ஆலயம் நேர்த்தியாய் கட்டி முடிக்கப்பட்டிருக்கிறது. இவ்வாலயத்தைத் திறந்து வைத்து, பிரதிஷ்டை செய்ய நம்முடைய தலைமைப் போதகர் அவர்களும் நம்முடைய மண்டல கண்காணிப்பாளர் அவர்களும், மாவட்ட மத்திய போதகர் அவர்களும், நம்முடைய ஐக்கியத்தைச் சார்ந்த ஊழியர்களும் வந்திருப்பது மிகுந்த மகிழ்ச்சி. அவர்களையும் இங்கு கூடியிருக்கிற விசுவாசிகளையும், ஊழியர்களையும், இவ்வாலயம் கட்ட உதவி செய்த யாவரையும் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்புடன் வரவேற்கிறேன்.

**ஈ) பாடல் (மகிழ்ச்சியான ஸ்தோத்திர பாடல்)**

**உ) ஆலய திறப்பு :**

நம்முடைய தலைமைப் போதகர் (அல்லது முன்குறிக்கப்பட்ட சிறப்பு அழைப்பாளர்) இப்பொழுது ஆலயத்தை திறந்து வைப்பார் என்று கேட்டுக் கொள்ள அவர் ஜெபித்து தேவனுடைய நாமத்திற்கு மகிமையாகவும் இப்பகுதி மக்கள் விடுதலையோடு ஆராதனை செய்யவும் பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே இவ்வாலயத்தை திறந்து வைக்கிறேன் என்று சொல்லி ரிப்பனை வெட்டுவார்.

ஊ) தலைமைப் போதகர், விருந்தினர்கள், ஊழியர்கள் முன்னே செல்ல விசுவாசிகள் பின்னே துதி பாடலோடு உள்ளே பிரவேசிக்க வேண்டும்.

**பிரதிஷ்டை ஜெபம்**

அ) உள்ளே சென்ற விசுவாசிகள் கைகளை உயர்த்தி சில நிமிடம் ஆராதிக்க வேண்டும். அதன்பின் போதகரால் கேட்டுக் கொள்ளப்படுகிறவர் பிரதிஷ்டை ஜெபத்தை ஏறெடுக்க வேண்டும்.



ஆ) பாடல் (மகிழ்ச்சி பொங்க வெற்றிப் பாடலை பாட வேண்டும்)

இ) வரவேற்புரை & விருந்தினரை கனப்படுத்துதல்: போதகர், செயலர், மூப்பர் இவர்களில் யாராவது ஒருவர் இஃதினை செய்ய வேண்டும்.

ஈ) வாழ்த்துரை (மண்டல, மாவட்ட தலைமைப் போதகர்கள் அல்லது மற்ற ஸ்தாபனத்தைச் சார்ந்த தலைவர்கள்)

உ) வேத பாடம் வாசித்தல்

ஊ) சிறப்புச் செய்தி

எ) இறுதி ஜெபமும் ஆசீர்வாதமும்

ஏ) நன்றி நவிலல்

முடிவாக நன்றி சொல்லி மக்களை விருந்து உபசரிப்பில் பங்கேற்க கேட்டுக் கொள்ள வேண்டும்.

**பொருத்தமான வேத பகுதிகள் :**

சங்கீதம் 122, ஏசாயா 56 : 6,7, II நாளாகமம் 7 : 14 - 16, யாத் 40 : 33 - 35, ஏசாயா 60 : 1 - 7, சங்கீதம் 24, வெளி 21: 24.

# 8

# மரணம்

**முன்னோட்டம் :**

மரணம் என்பது மனிதனாகப் பிறந்த எல்லோர்க்கும் நியமிக்கப்பட்ட ஒன்று. எனினும் விசுவாசிகளின் மரணம் மிக விசேஷமான ஒன்று. விசுவாசிகளின் மரணம் என்பது வேறு. விசுவாசிகள் வீட்டில் மரணம் என்பது வேறு. இவ்விரண்டிற்கும் நாம் செல்ல வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். விசுவாசிகளின் மரணத்தின் போது நாம் ஆரம்பத்திலிருந்து அடக்கம் வரை பொறுப்பேற்று நடத்த கடமைப்பட்டிருக்கிறோம்.

அஃதினைக் குறித்து பின்னர் எழுதுகிறேன்.

நம்முடைய சபை அங்கத்தினர் குடும்பத்தில் முழுமையாக கிறிஸ்துவுக்குள் வராமல் ஒருவர் மரித்து விட்டால் மனித நேயத்தின்படியும், கிறிஸ்துவுக்குள்ளான நம்முடைய ஆறுதல்களை, பாதிக்கப்பட்ட நம்முடைய சபைக் குடும்பத்தாருக்கு தெரிவிக்கும்படியாக கட்டாயமாக அவ்வீட்டிற்கு சென்றே ஆக வேண்டும்.

மரித்தவர் குணப்படாதவராக இருந்தாலும் அவர் அக்குடும்பத்தாருக்கு விசேஷமானவர் என்பது குறிப்பிடத்தக்கது. எனவே நமது அணுகுமுறை அதிநுட்பமாகவும் ஞானமாகவும் இருத்தல் வேண்டும். "பாவத்தின் சம்பளம் மரணம்" "பாவம் செய்கிற ஆத்துமா சாகும்" என்றெல்லாம் பிரசங்கிக்கக்கூடாது. அது விவேகமான காரியமல்ல. நாம் சென்றிருப்பது பாதிக்கப்பட்ட நமது விசுவாச குடும்பத்தை தேற்றும்படியாகத் தான் என்பதை மறந்து விடக்கூடாது.

எனவே பொதுவான வார்த்தைகளை சொல்லிவிட்டு இப்படிப்பட்ட நேரங்களில் நம்முடைய விசுவாசம் பலப்பட வேண்டும். கர்த்தரை இப்பொழுது தான் உறுதியாகப் பற்றிக் கொள்ள வேண்டும். இந்த இழப்பை அவர் ஒருவரால் மாத்திரம் ஈடுசெய்ய முடியும் என்று தேறுதல் சொல்லி அவர்களுக்காக ஆறுதலான ஜெபம் செய்து முடிக்க வேண்டும். தேவைப்படுவோர்க்கு நிதியுதவி செய்தும் உங்கள் அன்பை வெளிப்படுத்தலாம்.

**விசுவாசிகளின் அடக்கம் :**

**முன்னோட்டம் :**

கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் பாக்கியவான்கள். அவர்கள் புதைக்கப்படுவதில்லை. உயிர்த்தெழுதலின் நம்பிக்கைக்கென்று விதைக்கப்படுகிறார்கள். கர்த்தரின் நாளில் வேதம் **தொடக்கம் :**



சொல்லுகிறபடி அவர்களின் வரிசையின் படி உயிர்த்தெழுந்திருப்பர். எனவே ஜெபத்தோடும் நம்பிக்கையோடும் இவ்வடக்க ஆராதனையை ஊழியர் நடத்த வேண்டியது அவசியம். இந்திய கிறிஸ்தவத்தோடு இந்திய பண்பாடும் கலந்து செயல்படுகிறது. எனவே அந்த அடக்க ஆராதனையின் போது பாதிக்கப்பட்ட குடும்பத்தினர் செய்ய விரும்புகிற உறவு முறையான கடமைகளை தடுக்கக் கூடாது. ஆனால் புறமத பழக்கவழக்கங்களை அனுமதிக்கக் கூடாது.

**முன் ஏற்பாடுகள் :**

மரணம் இயற்கையானது தானா என்று உறுதி செய்து கொள்ள வேண்டும். விபத்து போன்ற மரணங்களுக்கு தக்க பிரேத பரிசோதனை சான்றை பெற்ற பின்னரே அடக்க ஆயத்தங்களை செய்ய முற்பட வேண்டும். கிறிஸ்தவ கல்லறை என்றால் நமது வழக்கத்தின்படி கிழக்கு மேற்காக பிரேதக் குழியை ஆயத்தம் செய்ய வேண்டும். கிறிஸ்தவ கல்லறை இல்லாமல் பொதுவான எல்லா சமயத்தினருக்கும் பொதுவான இடுகாட்டில் புதைக்க வேண்டிய நிலையானால் அங்கே முரண்டு பண்ணாமல் தெற்கு வடக்காக அவர்கள் வழக்கத்தின்படியே பிரேதக்குழியை ஆயத்தம் பண்ண வேண்டும். (தேவையில்லாத மத மற்றும் உள்ளூர் குழப்பங்களுக்கு நீங்கள் காரணமாகி விடாதீர்கள்.)

மரித்தோரின் அளவிற்கேற்ப பெட்டியை ஆயத்தம் செய்து குடும்பத்தார் அல்லது திருச்சபையாரின் வழக்கத்தின்படி வெள்ளை அல்லது கருப்பு துணியால் பெட்டியின் வெளிப்புறத்தை ஆயத்தப்படுத்தலாம்.

**பொருத்தமான வேத பகுதிகள் :**

2 தெசலோனிக்கேயர் 4 : 13 - 18, சங்கீதம் 90, சங்கீதம் 23, வெளி 14 : 13, யோவான் 11 : 20 - 26, ரோமர் 8 : 10,11, 1 கொரி 15 : 20 - 23, II கொரி 5 : 1 - 10.

அ) மரித்த சரீரம் வைக்கப்பட்டுள்ள பெட்டியின் இரு பக்கத்திலும் நெருங்கிய உறவினர்களையும், அதற்கடுத்த அடுக்கில் விசுவாசிகளையும் அமரச் செய்து பரலோகம் மற்றும் உயிர்த்தெழுதலின் நம்பிக்கைக்குரிய பாடல் ஒன்றினை பாட வேண்டும்.

**ஆ) ஜெபம் :**

(அடக்க அராதனை நன்முறையில் நடக்க குடும்பத்தாரின் ஆறுதலுக்காக ஒருவரை ஜெபிக்கச் சொல்ல வேண்டும்.)

**இ) சாட்சியின் வேளை :**

(மரித்தவரைக் குறித்து நற்சாட்சியாய் அறிவிக்க விசுவாசிகளில் ஒருவரையும் நெருங்கின உறவினர்களில் ஒருவரையும் அனுமதிக்கலாம்.)

**ஈ) வேதம் வாசிப்பு :**

(பொருத்தமான ஏதாவது ஒரு வேத பகுதியைத் தெளிவாக ஒருவர் வாசிக்க வேண்டும்)

**உ) செய்தி வேளை :**

(வேத பகுதியின் அடிப்படையில் உயிர்த்தெழுதல் மற்றும் கிறிஸ்துவின் வருகை ஆகிய கருத்துக்களை உள்ளடக்கிய ஆறுதல் செய்தியினை 15 நிமிடத்திற்கு மிகாமல் போதகர் அல்லது அவரால் அனுமதிக்கப்பட்டவர் செய்யலாம்.)

ஊ) இறுதியான ஜெபத்தை மூத்த ஊழியர் செய்து ஆசீர்வாதம் கூற வேண்டும்.

எ) முக்கிய பிரமுகர்கள் வழிவிட்டு மற்றவர்கள் இறுதி அஞ்சலி செலுத்த இடங்கொடுக்க வேண்டும்.

ஏ) விசுவாசிகள் வெளியேற, வீட்டார் இறுதி கடமை செய்த பின் பவனியாக பெட்டியை எடுத்துச் செல்ல வேண்டும்.

**கல்லறையில் அடக்கம் :**



அ) தேவைப்பட்டால் ஐந்து நிமிட செய்தி கொடுக்கலாம்.

ஆ) பெட்டியை மூடி ஆணி அடித்து பிரேதக் குழியில் இறக்க வேண்டும். அப்பொழுது ஒரு பல்லவியைப் பாட வேண்டும்.

இ) அடக்கம் செய்யும் போதகர் ஜெபிக்க வேண்டும். ஜெபத்தின் நடுவில் சொல்ல வேண்டியது. 1கொரி 15 : 51 – 57

இதோ, ஒரு இரகசியத்தை உங்களுக்கு அறிவிக்கிறேன். நாமெல்லாரும் நித்திரையடைவதில்லை. ஆகிலும் கடைசி எக்காளம் தொனிக்கும் போது, ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம்.

எக்காளம் தொனிக்கும், அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள். நாமும் மறுரூபமாக்கப்படுவோம்.

அழிவுள்ளதாகிய இது அழியாமையையும் சாவுக் கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக் கொள்ள வேண்டும்.

அழிவுள்ளதாகிய இது அழியாமையையும் சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக் கொள்ளும்போது, மரணம் ஜெயமாக விழுங்கப்பட்டது என்று எழுதியிருக்கிற வார்த்தை நிறைவேறும்.

மரணமே! உன் கூர் எங்கே? பாதாளமே! உன் ஜெயம் எங்கே?

மரணத்தின் கூர் பாவம், பாவத்தின் பெலன் நியாயப் பிரமாணம்.

நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலே நமக்கு ஜெயங்கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம்.

தொடர்ந்து சொல்ல வேண்டியது கர்த்தருக்குள் நித்திரையடைந்த............. அவர்களின் சரீரத்தை உயிர்த்தெழுதலின் நம்பிக்கைக்கென்று, பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே விதைக்கிறேன். (இதை சொல்லும்

போதே போதகர் மண்வெட்டியில், மண்ணை குழியில் போட வேண்டும்)

கர்த்தர் தம்முடைய நாளில் இவரை உயிரோடு எழும்பச் செய்வாராக. இயேசுவின் நாமத்தில் பிதாவே.

ஈ) சபையார் எல்லோரும் சேர்ந்து, என் ஆத்துமாவே கர்த்தரை ஸ்தோத்தரி என்ற வசனத்தை சொல்லி முடித்த பின்பு, மூத்த போதகர் ஆசீர்வாதத்தைக் கூறி அடக்க ஆராதனையை நிறைவு செய்ய வேண்டும்.

உ) குடும்பத்தார் முடிவெடுத்திருப்பார்களாகில் ஆறுதல் கூட்டத்தைக் குறித்த நாள் நேரத்தை அடக்கத்திற்கு வந்தவர்கள் யாவரும் அறியும்படி சத்தமாக மூப்பர் அல்லது உடன் ஊழியரைக் கொண்டோ சத்தமாக அறிவிக்க வேண்டும்.

ஊ) முடியுமானால் ஊழியரும் சபை மக்களில் சிலரும் துக்க வீட்டிற்கு சென்று ஜெபித்து விட்டு வீடு திரும்பலாம்.

# 9

# ஆறுதல் ஜெப ஆராதனை

**முன்னோட்டம் :**

அடக்க ஆராதனையில் கலந்து கொண்ட மக்களுக்காகவும் துக்க நேரத்தில் ஆறுதல் செய்யும் படியாக வந்த மக்களுக்கு நன்றி சொல்லும்படியாகவும், பரிசுத்தவான்களின் ஜெபத்தினாலும் நல்வார்த்தைகளினாலும் ஆறுதல் பெறும்படியாகவும் துக்ககரமான வேளையிலும் சகலமும் சரியாய் நடந்தேற உதவி செய்த கர்த்தருக்கு துதி செலுத்தும்படியாகவும், ஆறுதல் ஸ்தோத்திர ஜெபக் கூட்டங்கள் துக்க வீட்டார் சார்பாக நடத்துவதில் தவறில்லை.

ஆனால் நாற்பது நாள் நினைவுக் கூட்டம் என்பதெல்லாம்



பாரம்பரியமே. இந்துக்களின், பதினாறாவது நாள் துக்க நிவிர்த்தி சடங்குகளிலிருந்து வெளியே வந்த கிறிஸ்தவம் யூதப் பாரம்பரியத்தின் நாற்பது நாள் துக்க அநுசரிப்பை பற்றிக் கொண்டது தான் பரிதாபம். எனினும் இதைத் தவிர்க்க இயலாது. இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு துக்க வீட்டார்க்கு ஆறுதலையும் அக்கூட்டத்தில் பங்கு பெற வருகிற அவிசுவாசி களுக்கு நற்செய்தியையும் சொல்ல நல்ல வாய்ப்பு கிடைக்கிறது. அதைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். நாளெல்லாம் எண்ணிப் பார்க்காமல் எல்லோரும் கூடக்கூடிய வசதியான நாளில் – நேரத்தில் கூட்டத்தை வைக்க, குறிப்பிட்ட துக்க வீட்டாருக்கு அறிவுறுத்த வேண்டும்.

**முன் ஏற்பாடுகள் :**

இதற்காக ஒரு சிறிய நிகழ்ச்சி நிரலை ஆயத்தப்படுத்துவது நல்லது. மரித்தோரைக் குறித்து சாட்சி சொல்ல இரண்டு பேருக்கு முன்கூட்டியே சொல்ல வேண்டும்.

1. தொடக்க ஜெபம்
2. பாடல்கள் (ஒரு துதி பாடல், ஒரு ஆறுதலின் பாடல்)
3. மரித்தவரைக் குறித்த சாட்சிகள். (சபையாரில் ஒருவர், உறவினர் அல்லது நண்பரில் ஒருவர்)
4. வேத பாடம்
5. அருளுரை (20 நிமிடத்திற்கு மிகாமல்)

# 10
# மகப்பேற்றிற்குச் செல்லும் மங்கையருக்கு ஜெபம்

**முன்னோட்டம் :**

கர்ப்பிணிப் பெண்கள் பிரசவத்திற்காக கணவன் வீட்டிலிருந்து தாய்வீட்டிற்கு செல்லும் பொழுது வைக்கப்படுகிறஜெபம் இஃது. இதற்கு வளைக்காப்பு, சீமந்தம் என்று பல பெயர்களை மக்கள் வைத்தாலும் அவைகளுக்கு நாம் முக்கியத்துவம் கொடுக்க வேண்டிய அவசியமில்லை. இது புறமதத்தாரின் பழக்கமென்று ஒதுக்கி விடவோ, வேதப்பூர்வமானது என்று ஒத்து ஊதவோ முடியாத உணர்வுப் பூர்வமான பண்பாடு சார்ந்த ஜெபமாகும்.

பெண் எவ்வளவு தைரியசாலியாய் இருந்தாலும் பேறுகாலம் என்பது உடல் ரீதியாகவும், உள்ள ரீதியாகவும் அச்சத்தைக் கொண்டு வரக் கூடிய ஒன்று. எனவே பேறு காலத்தின்போது தாய்வீட்டில் இருப்பது என்பது, மனநிறைவைத் தரக்கூடிய ஒன்று. மேலும் உன்னை ஜெபத்தில் தாங்க நாங்கள் இருக்கிறோம் என்று அவர்களை உற்சாகப்படுத்தி கர்த்தருடைய பாதுகாப்பின் கீழ் ஒப்புக்கொடுத்து நடத்தப்படுகிற ஜெபமாக இஃது இருக்க வேண்டும்.

**பொருத்தமான வேத பகுதிகள் :**

சங் 128, 127; சங் 113 : 9; ஏசா 66 : 9; லூக் 1 : 42 - 55



**முன்னேற்பாடு :**

இது கர்ப்பிணி பெண்ணை மையமாக வைத்து, இரு குடும்பத்தாரும் ஐக்கியப்பட்டு, கர்த்தர் தந்த ஆசீர்வாதத்திற்காக துதிக்கின்ற நாள்; அவர் பாதுகாப்பிற்காக ஜெபிக்கிற நாள், எனவே நெருங்கிய உறவினர்களும், சபைக்குடும்பங்களும் பங்கேற்க வசதியான நேரத்தை குறிக்க வேண்டும். மேலும் இந்த ஜெபத்தில், போதகரின் மனைவி, மற்றும் பெண் ஊழியர்கள் கண்டிப்பாக கலந்து கொள்ள வேண்டும்.

இதற்கென்று வரையறுக்கப்பட்ட ஆராதனை முறை கிடையாது. எனவே பொதுவான நிகழ்ச்சி நிரலைக் கொடுக்கிறேன் :

**நிகழ்ச்சி நிரல்:**

1) ஆரம்ப ஜெபம்
2) பாடல் வேளை (ஒரு துதிப்பாடல், ஒரு வாக்குத்தத்த பாடல்)
3) ஆராதனை
4) சாட்சி (கர்ப்பிணிப் பெண் அல்லது கணவர்)
5) சிறப்பு மண்றாட்டு
6) செய்தி
7) ஜெபம் (கர்ப்பிணிப் பெண்ணின் மேல் போதகரின் மனைவி மற்றும் போதகர் கைகளை வைத்து, வாக்குத்தத்தங்களைச் சொல்லி ஆசீர்வதித்து ஜெபிக்க வேண்டும்)
8) ஆசீர்வாதம்
9) நன்றி
10) விருந்தோம்பல்

# பகுதி 2



# மாதிரிப் படிவங்கள்

# திருமண அறிக்கை வாசித்தலும் தகுதி சான்றிதழ் வழங்குதலும்

**முன்னோட்டம் :**

திருமணம் என்பது திருமறை கூறுகிறபடி பரிசுத்தமானது. மேலும் அரசியல் அமைப்பின்படி சட்டப்பூர்வமானது. எனவே கிறிஸ்தவ திருமணங்கள் திருமறை ஒழுங்கின்படியும் இந்திய திருமண சட்டத்தின்படியும் சகலத்தையும் சரியாய் செய்ய வேண்டியது அவசியம்.

திருமணம் நடப்பதற்கு 21நாட்களுக்கு முன்பாக தொடங்கி (அல்லது மூன்று ஞாயிறு ஆராதனையில்) திருமணத்திற்கு முன்பாக மூன்றுமுறை மக்கள் முன்பு (திருச்சபைக்கு) பொது அறிவிப்பை வெளியிட்டு தடை ஏதும் இல்லையென்று அறிந்து சான்று வழங்க வேண்டியது மணமகன், மணமகள் போதகரின் கடமையாகும்.

**முன் ஏற்பாடு :**

1) யாருக்காக அறிவிப்பு கொடுக்கப் போகிறோமோ அவரும் அவரது பெற்றோர் அல்லது பாதுகாவலர் அல்லது பாதுகாப்பாளர் கையொப்பமிட்ட வேண்டுகோளை எழுத்து வடிவில் பெற்றுக் கொள்ள வேண்டும்.

2) மணமகனின் போதகர் முதலில் மூன்று தேதிகள் குறிப்பிட்டு இந்த தேதிகளில் திருமண அறிவிப்பை உங்கள் சபையில் வாசியுங்களென்று மணமகளின் போதகருக்கு கடிதம் தர வேண்டும். (Certificate Before Banns)

3) இக்கடிதத்தைப் பெற்றவுடன் அதே தேதிகளில் குறிப்பிட்டு மணமகளின் போதகர் மணமகனின் போதகருக்கு கடிதம் கொடுத்து உறுதி செய்ய வேண்டும்.



4) இப்படி கடித (Certificate before banns) மாற்றத்திற்குப் பிறகுதான் திருமண அறிக்கையை சபையில் வாசிக்க வேண்டும்.

5) குறிக்கப்பட்ட தேதிகளில் தான் மணமகன், மணமகள் சபைகளில் திருமண அறிக்கை வாசிக்க வேண்டும். வாசிக்கப்படுகிற இடங்களில் இருவீட்டாரின் பிரதிநிதிகள் கண்டிப்பாய் இருத்தல் அவசியம்.

6) மூன்று அறிவிப்புகள் வாசித்த பிறகு தடைகள் எதிர்ப்புகள் ஏதுமில்லையென்றால் மணமகன், மணமகள் ஆகியோரின் போதகர்கள் திருமணத்தை நடத்தலாம். தடையேதும் இல்லையென்று (Certificate after banns) திருமணத்தை பதிவு செய்து வைப்பவருக்கு திருமண வீட்டார் மூலம் அனுப்பித் தர வேண்டும்.

7) கடித பரிமாற்றங்கள் ஒவ்வொன்றிலும் பொறுப்பானவர்களின் கையொப்பமும் திருச்சபையின் முத்திரையும் (Rubber Stamp) கண்டிப்பாக இருத்தல் வேண்டும்.

**குறிப்பு :** திருமண அறிவிப்பு வாசித்தல், அதற்கு முன்னும் பின்னும் தர வேண்டிய சான்றிதழ்களின் மாதிரிப் படிவங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

## திருமண தகுதி அறிவிப்பு

நமது திருச்சபையின் அங்கத்தினரும் ..................... ......................................................................................... என்ற விலாசத்தில் உள்ள ................................... என்பவரின் மகன் / மகள் ........................ என்பவருக்கும் ................................... திருச்சபையின் அங்கத்தினரும் ........................................................ என்ற விலாசத்தில் வசிக்கும் ...................... என்பவரின் மகன் / மகள் ...................................... என்பவருக்கும் திருமணம் நிச்சயிக்கப்பட்டுள்ளது.

இவர்களை இந்த திருமணத்தில் இணைக்கக்கூடாதபடி நியாயமான தடைகளோ, காரணங்களோ இருக்குமென்றால் அதை எழுத்து வடிவில் தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். இது இவர்கள் திருமணத்திற்கான முதலாம் / இரண்டாம் / மூன்றாம் தகுதி அறிவிப்பாகும்.

அறிக்கை வாசிக்கப்பட்ட நாள் :

வாசித்தவரின் கையொப்பம்

1 - ..................................

2 - .................................

3 - ..................................



## CERTIFICATE BEFORE BANNS

Place :.............................

Date : .............................

This is to certify that................................................

Son / Daughter of Mr.......................................................

Residing at................................................................ is a Bachelor / Spinster / Widower/widew and there is no objection for the publication of Banns of marriage with Mr / Miss...................................................................

Son / Daughter of................................................ residing at........................................................... on the following dates

Banns : Dates

I

II

III

Pastor

## CERTIFICATE AFTER BANNS

Place :..............................

Date : ..............................

This is to certify that there is no objection for the solemnization of the marriage arranged between Mr.........................................................................................

S/o. of Mr.........................................................................

residing at ........................................................................

and Miss..............................................................D/o. of Mr.................................................. residing at.................................................. as the Publication of banns made on the under mentioned dates have no impediments against the Alliance.

Banns : Dates

I

II

III

Pastor



# பகுதி 3
# பிரசங்க குறிப்புகள்

# குழந்தை பிரதிஷ்டை

**செய்தி 1 : பெற்றோருக்கு சில ஆலோசனை**

1. உங்கள் பிள்ளைகள் கர்த்தரால் கொடுக்கப்பட்டவர்கள் என அறிந்து கொள்ளுங்கள். - (ஏசாயா 8 : 18, ஆதி 48 : 9, ஆதி 33 : 5)

2. அவர்களைக் குறித்து கர்த்தரிடத்தில் கேட்டு விசாரித்து வளருங்கள். (நியாயா 13 : 12,13)

3. அவர்களுக்கு ஆவிக்குரிய தலைவராயிருந்து வழிகாட்டுங்கள். (யோபு 1 : 5)

4. கர்த்தர் பார்த்துக்கொள்வார் என்று பொறுப்புகளை தட்டிக் கழிக்காதீர். (ஏலி தவறினான்) – (1 சாமு 2 : 29, 1 சாமு3 : 13)

5. தேவைக்கு அதிகமாக செல்லம் கொடுக்காதீர். (தாவீது தவறினான்) – (2 இராஜா 1 : 6)

பிரம்பை கையாளுங்கள் – (நீதி. 23 : 13)

**செய்தி 2 : நானும் எனது பிள்ளைகளும்** ஏசாயா 8 : 18

1. கர்த்தர் கொடுத்த பிள்ளை (சங். 127 : 4)
2. கர்த்தருக்கு அடையாளங்கள் (சாட்சியுள்ள வாழ்க்கை)
3. கர்த்தருக்கென்று அற்புதங்கள் (கிரியையுள்ள வாழ்க்கை)

**செய்தி 3 : குழந்தையை வளர்ப்பதும் நடத்துவதும்**
நியாயாதிபதிகள் 13 : 12

**குறிப்பு :** வளர்ப்பது வேறு, நடத்துவது வேறு. வளர்ப்பது **Feeding** நடத்துவது **Leading.**

ஒரு குழந்தை வளர வேண்டிய நான்கு விதங்கள்.
லூக்கா. 2 : 52

1. ஞானத்திலும் (Mentally)
2. வளர்த்தியிலும் (Physically)



3. தேவ கிருபையிலும் (Spiritually)
4. மனுஷர் தயவிலும் (Socially)

**முடிவாக :** பிள்ளையாண்டானை நடத்த வேண்டிய விதத்தில் நடத்து. (நீதி. 22 : 6)

# திருமுழுக்கு

**செய்தி 1 :** (மத்தேயு 28 : 19)

**ஞானஸ்நானம் எதற்கு?**

1. இரட்சிக்க அது அவசியம் (மாற் 16 : 16)
2. பரலோகத்தில் பிரவேசிக்க அது அவசியம் (யோவான் 3 : 5)
3. உயிர்த்தெழுதலில் பங்கடைய அது அவசியம் (ரோமர் 6 : 5)

**செய்தி 2 : ஞானஸ்நானம் என்பது என்ன?**

1. பாவம் போக கழுவப்படுதல் (அப். 22 : 16)
2. தேவ நீதியை நிறைவேற்றுதல் (மத். 3 : 15)
3. நல்மனசாட்சியின் உடன்படிக்கை (1 பேது 3 : 21)

**செய்தி 3 : ஞானஸ்நானம் யார், எப்படி எடுக்க வேண்டும்?**

1. விசுவாசமுள்ளவனாகி (மாற் 16 : 16)
2. மனந்திரும்பி (அப். 2 : 38)
3. பாவங்களை அறிக்கையிட்டு (மாற் 1 : 5)

# திருவிருந்து

**செய்தி 1 :**

இயேசுவின் இரத்தத்தின் ஐந்து ஆசீர்வாதங்கள்

1. இயேசுவோடு இணைக்கும் இரத்தம் (எபே. 2 : 13)
2. பாவங்களை நீக்கும் இரத்தம் (1 யோவான் 1 : 7)
3. ஊழியத்திற்கு தகுதியாக்கும் இரத்தம் (எபி 9 : 14)
4. சமாதானத்தை உண்டாக்கும் இரத்தம் (கொலோ 1 : 20)

5. பிசாசை ஜெயிக்கும் இரத்தம் (வெளி 12 : 11)

**செய்தி 2 :**

**அப்பம் பிட்குதல் (அப். 2 : 42)**

**அப்பம் பிட்குதலின் 5 அம்சங்கள் :**

1. யோவான் 6 : 54 – நித்திய ஜீவனும் உயிர்த்தெழுதலும்

2. யோவான் 6 : 56 – கிறிஸ்துவோடு உள்ள ஐக்கியத்தை நிலைக்கப் பண்ணுகிறது.

3. 1 கொரி 11 : 26 – கிறிஸ்துவின் மரணத்தை அறிக்கையிடச் செய்கிறது.

4. 1 கொரி 11 : 26 – அவர் வருகையை அறிக்கை செய்கிறது. (அவர் வருமளவும்)

5. 1 கொரி 10 : 17 – அநேகரான நம்மை ஒன்றாய் இணைக்கிறது. (விசுவாசிகளோடு ஐக்கியம்)

## திருமண ஆராதனை

**செய்தி 1 :**

**விவாகம் யாவருக்குள்ளும் கனமுள்ளதாய் இருக்கிறது.**

1. திருமணம் தேவனால் ஆயத்தமாக்கப்பட்டது (ஆதி. 2 : 18)
2. திருமணம் தேவனால் அங்கீகரிக்கப்பட்டது (மல். 2 : 15)
3. திருமணம் தேவனால் ஆசீர்வதிக்கப்பட்டது. (யோ. 2 : 2)

ஆகையால் புருஷர்களே,

1. எபே. 5 : 25 – மனைவிகளில் அன்பு கூறுங்கள்
2. எபே. 5 : 29 – மனைவியை போஷித்துக் காப்பாற்றுங்கள்.
3. 1 பேதுரு 3 : 7 – மனைவியை கனம் பண்ணுங்கள்
4. கொலோ 3 : 19 – மனைவியை கசந்து கொள்ளாதிருங்கள்.
5. மல்கி 2 : 16 – மனைவிக்கு துரோகம் செய்யாதிருங்கள்.



இப்படியிருக்க மனைவிகளே,

1. எபே 5 : 22 – கணவருக்கு கீழ்ப்படியுங்கள்.
2. எபே. 5 : 33 – கணவரிடம் பயபக்தியாயிருங்கள்
3. 1 பேதுரு 3 : 4 – நற்குணத்தால் அலங்கரித்துக் கொள்ளுங்கள்.
4. நீதி 31 : 15 – குடும்பத்தில் சுறுசுறுப்பாயிருங்கள்
5. 1 பேதுரு 3 : 1 – உங்கள் பக்தியினால் கணவனைக் கர்த்தருக்குள்ளாக்குங்கள்.

**செய்தி 2 : இனிய தம்பதிகள்**

சகரியா – எலிசபெத்

காலதாமதம் ஆனாலும் யோவானைப் பெற்றது ஆசீர்வாத தம்பதிகளின் சிறப்பு

1. வசனத்தின்படி வாழ்பவர்கள் – லூக்கா 1 : 6
2. தேவ சமூகத்தில் தூபம் (ஜெபம்) காட்டுபவர்கள் – லூக்கா 1 : 9
3. நன்றி சொல்லி துதிப்பவர்கள் – லூக்கா 1 : 24
4. ஆவியில் நிறைந்தவர்கள் – லூக்கா 1 : 41,67
5. இசைந்த சிந்தை உள்ளவர்கள் – லூக்கா 1 : 60, 63

(சகரியா மனதில் உள்ளதையே எலிசபெத்தும் சொன்னாள்)

## வீடு பிரதிஷ்டை

**செய்தி 1 : அடியானின் வீடு ஆசீர்வதிக்கப்படுவதாக**

(சாமு 7 : 29)

1. வீட்டிற்குள் சமாதானமும் சுகமும் உண்டு (சங். 122 : 7)
2. நல்ல மனைவி உன் வீட்டில் உண்டு (சங். 128 : 3)
3. நல்ல பிள்ளைகள் உன் வீட்டில் உண்டு (சங். 147 : 13)

**செய்தி 2 : தேவன் வீடு ஏற்படுத்துகிறார் (சங். 68 : 6)**

**உங்கள் வீடு எப்படியிருக்க வேண்டும்?**

1. சங். 118 : 15 – எப்பொழுதும் துதித்துக் கொண்டிருங்கள்.

2. உபா. 6 : 9 – வசனங்களை வீட்டில் எழுதி வையுங்கள் (வசன போர்டுகள்)

3. உபா. 7 : 26 – அருவருப்பானதை வீட்டிற்குள் அனுமதிக்காதீர்கள் (கதை புத்தகம், சினிமா காட்சிகள்)

4. சங். 101 : 2 – உத்தம இருதயத்தோடு நடந்து கொள்ளுங்கள். (மற்றவர்களை கேலி செய்து அரட்டை அடிக்காதீர்கள்)

5. மாற்கு 3 : 25 – உங்களுக்குள்ளே பிரிவினை இல்லாமலிருங்கள். (அம்மா கட்சி, அப்பா கட்சி)

**செய்தி 3 : உன் வீடு எப்படிப்பட்டது?**

1. நிலை நிற்கும் வீடு – (நீதி. 12 : 7, மத் 7 : 24 – 25)

2. ஆசீர்வதிக்கப்பட்ட வீடு – (சாமு 7 : 29, சாமு 6 : 11)

3. வேலியடைக்கப்பட்ட வீடு – (யோபு 1 : 10, சங் 91 : 10 யாத் 12 : 13)

4. அதிக பொக்கிஷம் நிறைந்த வீடு – (நீதி 15 : 6, சங். 112 : 1–3)

5. ஜெபவீடு – (அப்போஸ் 1 : 13,14, சங். 118 : 15)

6. கர்த்தரால் கட்டப்படும் வீடு (1 நாளா. 17 : 10, ஆகாய் 1 : 4,9)



# ஆலய பிரதிஷ்டை

**செய்தி 1 : சுய இரத்தத்தினால் சம்பாதித்த சபை (அப். 20 : 28)**

**சபையைக் குறித்து மூன்று உதாரணங்கள் :**

1. சரீரம் – தலை கிறிஸ்து (எபே. 1 : 23)
நாம் அவயங்கள் – 1 கொரி 12 : 27, ரோமர் 12 : 5

2. மாளிகை – இயேசு தலைக்கல் (எபே. 2 : 20, 21)
நாம் கற்கள் (1 பேதுரு 2 : 5)

3. மணவாட்டி – கிறிஸ்து மணவாளன் (எபே. 5 : 25)
நாம் நியமிக்கப்பட்ட கன்னிகள் (II கொரி 1 : 22)

**செய்தி 2 : வாசஸ்தலமாகக் கட்டப்பட்டு வருகிறோம். (எபேசி. 2 : 19 – 21)**

I கொரி 3 : 16, 1 பேதுரு 2 : 5

(நாம் ஆலயமாயும் கற்களாயும் இருக்கிறோம். நாம் கட்டப்படும் விதத்திற்காக சாலொமோன் ஆலயத்தை சிந்திப்போம்.)

1. 1 இராஜா 5 : 1 – கற்கள் தீருவிலிருந்து கொண்டு வரப்பட்டது. (தீரு பிசாசின் இராஜ்யம் – எசேக். 28 : 12, 26 : 2)

2. 1 இராஜா 6 : 7 – பணிதீர்ந்து கொண்டு வரப்பட்டது. (ஞானஸ்நானம்)

3. 1 இராஜா 6 : 7 – எருசலேமுக்கு கொண்டு வரப்பட்டது. (சபை கூடுதல்)

4. 1 இராஜா 6 : 18 – கற்கள் காணக்கூடாதபடி கேதுருவினால் மூடினான். (கேதுரு – கிறிஸ்து, கிறிஸ்துவில் தேறுகிற அனுபவம்)

5. 1 இராஜா 6 : 21, 22 – கடைசியில் பொன்னினால்

மூடினான். (கிறிஸ்துவின் மகிமையினால் நிறைய வேண்டும் – II கொரி 8 : 1)

**செய்தி 3 : மக்கதோனியா சபை பெற்றிருந்த கிருபைகள்** (II கொரி 8 : 1)

1. தரித்திரத்தில் உதாரத்துவமாய் கொடுத்தார்கள். – II கொரி 8 : 2
2. தேவ சித்தத்தின்படி தங்களை ஒப்புக்கொடுத்தார்கள். – II கொரி 8 : 5
3. பரிசுத்தவான்களுக்கு பொருளில் ஊழியம் செய்தார்கள். – II கொரி 8 : 4

**செய்தி 4 :**

**பெத்தேல் – தேவனுடைய வீடு (ஆதி 28 : 11 – 22)**

தேவனுடைய வீட்டில் இருப்பவை / இருக்க வேண்டியவை

1. அமைதி, இளைப்பாறுதல்
(Peace - நிம்மதியாய் தூங்குதல், வச – 11)
2. வானத்திற்கும், பூமிக்கும் ஏணி (தேவ சமூகம்)
(Presence of God, வச – 12)
3. வார்த்தை, வாக்குத்தத்தங்கள் (தேவன் பேசுமிடம்)
(Promise of god, வச – 13)
4. ஆராதனை
(கல்லை நட்டு, எண்ணெய் வார்த்து ஜெபித்தான்)
(Praise and Worship, வச – 18)
5. பொருத்தனைகள், தசமபாகம் செலுத்துமிடம்
(Presenting Offerings, வச – 22)



# அடக்க ஆராதனை

**செய்தி 1 : நீதிமான்களின் மரணம்**

1. வாஞ்சிக்கப்படுவது – எண் 23 : 10
2. பயமற்றது – சங். 23 : 4
3. அருமையானது – சங். 116 : 15
4. நம்பிக்கையானது – நீதி. 14 : 32
5. மிகுந்த ஆதாயம் – பிலி. 1 : 21
6. விசுவாசத்தின் ஒளி பெற்றது – எபி. 11 : 13
7. பாக்கியமுள்ளது – வெளி 14 : 13

**செய்தி 2 : கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் பாக்கியவான்கள் (வெளி. 13 : 14)**

**குறிப்பு :** அவர்கள் இளைப்பாறுதல் பெறுவார்கள். இந்த இளைப்பாறுதலை பெறுவதற்கு முன் ருசிபார்க்க வேண்டிய மூன்று இளைப்பாறுதல்கள்.

1. மத். 11 : 28 – இரட்சிப்பு
2. எரே. 6 : 16 – அப்போஸ்தல உபதேசத்தில் நடத்தல்
3. ஏசா. 28 : 11 – பரிசுத்தாவியைப் பெறுதல், அந்நிய பாஷை பேசுதல்.

# ஆறுதல் கூட்டம்

**செய்தி 1 : மரணத்தை ஜெயித்திடுவோம்**

(1 கொரி 15 : 51 – 57)

நித்திய மரணத்தை ஜெயிக்க இந்த உலகத்தில் நாம் ஜெயிக்க வேண்டிய 5 ஆவிக்குரிய மரணங்கள்.

1. ரோமர் 6 : 23 – பாவ மரணம்
2. ரோமர் 8 : 6 – மாம்ச சிந்தை மரணம்
3. கொரி 7 : 10 – லௌகீக துக்கம் மரணம்

4. 1 தீமோ 5 : 6 – சுக போகமாய் வாழ்தல்

5. 1 யோவா 3 : 14 – சகோதரனிடத்தில் அன்பு கூறாமை

**செய்தி 2 : இல்லை! மரணம் நமக்கில்லை! (கொரி 15 : 51)**

1. யோவான் 8 : 51 – வசனத்தைக் கைக்கொள்பவன் மரணத்தைக் காண்பதில்லை

2. யோவான் 11 : 26 – கர்த்தரை விசுவாசிப்பவன் மரிப்பதில்லை

3. யோவான் 6 : 50,58 – பந்தியில் பங்கேற்பவன் மரிப்பதில்லை

**செய்தி 3 : ஆறுதல் அடையுங்கள் (2 கொரி 13 : 11)**

1. பரிசுத்த ஆவியின் ஆறுதல் – அப். 9 : 31
2. தேவ வசனத்தின் ஆறுதல் – ரோமர் 15 : 4
3. தீர்க்கதரிசனத்தின் ஆறுதல் – 1 கொரி 14 : 3
4. அன்பினாலே ஆறுதல் – பிலே 7
5. வாக்குத்தத்தங்களின் ஆறுதல் – எபி. 6 : 18
6. பாடுகள் பெருகுகையில் ஆறுதல் – 2 கொரி 1 : 5-7
7. தேவன் அருளின ஆறுதல் – 2 கொரி 1 : 4

**செய்தி 4 :**

**இளைப்பாறுதலில் பிரவேசிக்க செய்ய வேண்டிய உன்னத கடமைகள்**

1. பின் வாங்கிப் போகாமல் பயந்திருக்கடவோம். (எபிரெயர் 4 : 1)
2. இளைப்பாறுதலில் பிரவேசிக்க ஜாக்கிரதையாய் இருக்கக்கடவோம். (எபி. 4 : 11)
3. அறிக்கையை உறுதியாய் பற்றிக் கொண்டிருக்கக்கடவோம். (எபிரெயர் 4 : 14, 6 : 23)



4. கிருபாசனத்தண்டையிலே சேரக் கடவோம். (எபிரெயர் 4 : 16)
5. பூரணராகும்படி கடந்து போவோம். (எபி. 6 : 1,2)
6. விசுவாசத்தின் பூரண நிச்சயத்தோடு சேரக்கடவோம். (எபி. 10 : 22)
7. புத்தி சொல்லக் கடவோம் (எபி. 10 : 25)

## மகப்பேற்றிற்கு செல்லும் மங்கையருக்கு...

**செய்தி 1 : வல்லமையுடையவர் மகிமையானதை செய்தார் (லூக்கா. 1 : 49)**

1. அவர் பெறச் செய்கிறவர் (ஏசா. 66 : 9)
2. சந்தோஷத்தை நிறைவாக்குகிறவர் (சங். 113 : 9)
3. தேவ பக்தியுள்ள சந்ததியை தருகிறார். (மல். 2 : 15)

**செய்தி 2 : நான் உன்னை மறப்பதில்லை (ஏசா. 49 : 15)**

1. என் நீதியின் கரத்தினால் தாங்குவேன் (ஏசா. 41 : 10)
2. உன்னை பலப்படுத்துவேன் (ஏசா. 41 : 10)
3. உன்னோடு இருப்பேன் (ஏசா. 41 : 10)

# பகுதி 4



# ஆராதனைப் பாடல்கள்

- துதி ஸ்தோத்திர பாடல்கள்
  (பாடல் எண்கள் 1, 2, 3, 4)
- நம்பிக்கையின் பாடல்கள்
  (பாடல் எண்கள் 5, 6, 7, 8)
- திருவிருந்து ஆராதனையின் பாடல்கள்
  (பாடல் எண்கள் 9, 10)
- திருமுழுக்கு ஆராதனை
  (பாடல் எண்கள் 11, 12)
- ஆலய பிரதிஷ்டை பாடல்கள்
  (பாடல் எண்கள் 13, 14)
- திருமணப் பாடல்கள்
  (பாடல் எண்கள் 15, 16, 17)

## துதி ஸ்தோத்திர பாடல்கள்

### பாடல் - 1

1. அல்லேலூயா, கர்த்தரையே ஏகமாய்த் துதியுங்கள்
அவர் நடத்தும் செயல்களெல்லாம் பார்த்தோரே
- துதியுங்கள்
வல்லமையாய்க் கிரியை செய்யும் வல்லோரைத்
துதியுங்கள்.
எல்லோரையும் ஏற்றுக் கொள்ளும் ஏசுவைத் துதியுங்கள்

**பல்லவி**

ராஜாதி ராஜனாம் ஏசுராஜன் பூமியில் ஆட்சி செய்வார்
அல்லேலூயா, அல்லேலூயா தேவனைத் துதியுங்கள்

2. தம்புரோடும், வீணையோடும் கர்த்தரைத் துதியுங்கள்
இரத்தத்தினால் பாவங்களைப் போக்கினார் துதியுங்கள்
எக்காளமும் கைத்தாளமும் முழங்கிட துதியுங்கள்
எக்காலமும் மாறாதவர் இயேசுவைத் துதியுங்கள்

3. சூரியனே சந்திரனே தேவனைத் துதியுங்கள்
ஒளியதனை எங்கள் உள்ளம் அளித்தோரைத் துதியுங்கள்
அக்கினியே, கல்மழையே படைத்தோரைத் துதியுங்கள்
அக்கினியாய் கல்மனதை உடைப்போரைத் துதியுங்கள்

4. பிள்ளைகளே வாலிபரே தேவனைத் துதியுங்கள்
வாழ்வதனை அவர் பணிக்கே கொடுத்து நீர் துதியுங்கள்
பெரியவரே, பிரபுக்களே தேவனைத் துதியுங்கள்
செல்வங்களை ஏசுவுக்காய் செலுத்தியே துதியுங்கள்.

5. ஆழ்கடலே சமுத்திரமே தேவனைத் துதியுங்கள்
அலையலையாய் ஊழியர்கள் எழும்பினார் துதியுங்கள்



தூதர்களே, முன்னோடிகளே தேவனைத் துதியுங்கள்
பரலோகத்தைப் பரிசுத்தர்கள் நிரப்புவார் துதியுங்கள்.

★ ★ ★

### பாடல் - 2

எண்ணிலடங்கா ஸ்தோத்திரம் - தேவா
என்றென்றும் நான் பாடுவேன்
இந்நாள் வரை என் வாழ்விலே
நீர் செய்த நன்மைக்கே - தேவா

**அனுபல்லவி**

1. வானாதி வானங்கள் யாவும்
அதின் கீழுள்ள ஆகாயமும்
பூமியில் காண்கின்ற யாவும்
கர்த்தா உம்மைப் போற்றுமே ஆ... (3)

2. காட்டினில் வாழ்கின்ற யாவும்
கடும் காற்றும் பனி தூறலும்
நாட்டினில் வாழ்கின்ற யாவும்
நாதா உம்மை போற்றுமே ஆ... (3)

3. நீரினில் வாழ்கின்ற யாவும் - இந்
நிலத்தின் ஜீவ ராசியும்
பாரினில் பறக்கின்ற யாவும்
பரனே உம்மைப் போற்றுமே ஆ... (3)

4. வால வயதுள்ளோரும் - மிகும்
வயதால் முதிர்ந்தோர்களும்
பாலகர் தம் வாயினாலும்
பாடி உம்மைப் போற்றுவாரே ஆ... (3)

★ ★ ★

## பாடல் - 3

மகிமை மாட்சிமை நிறைந்தவரே
மகிழ்வுடன் தொழுதிடுவோம்
பரிசுத்த தேவனாம் இயேசுவை
பணிந்தே தொழுவோம்

1. உன்னத தேவன் நீரே
ஞானம் நிறைந்தவரே
முழங்கால் யாவுமே
பாரினில் மடங்கிடுதே
உயர்ந்தவரே சிறந்தவரே
என்றும் தொழுதிடுவோம் - மகிமை

2. ஒருவரும் சேரா ஒளியில்
வாசம் செய்பவரே
ஒளியினை தந்துமே
இதயத்தில் வாசம் செய்யும்
ஒளி நிறைவே அருள் நிறைவே
என்றும் தொழுதிடுவோம் - மகிமை

3. பரிசுத்த தேவன் நீரே
பாதம் பணிந்திடுவோம்
கழுவியே நிறுத்தினீரே
சத்திய தேவன் நீரே
கனமகிமை செலுத்தியே நாம்
என்றும் தொழுதிடுவோம் - மகிமை

4. நித்திய தேவனும் நீரே
நீதி நிறைந்தவரே



அடைக்கலமானவரே
அன்பு நிறைந்தவரே
நல்லவரே வல்லவரே
என்றும் தொழுதிடுவோம் - மகிமை

★ ★ ★

## பாடல் - 4

ஜெயம் கொடுக்கும் தேவனுக்கு
கோடி கோடி ஸ்தோத்திரம்
வாழ்வளிக்கும் இயேசு ராஜாவுக்கு
வாழ்நாளெல்லாம் ஸ்தோத்திரம்
அல்லேலூயா அல்லேலூயா பாடுவேன்
ஆனந்த தொனியாய்
உயர்த்துவேன்

1. நீதியின் கரத்தினால் தாங்கி நடத்துவார்
கர்த்தரே என் பெலன் எதற்குமே அஞ்சிடேன் - ஜெயம்

2. அற்புதம் செய்பவர் அகிலம் படைத்தவர்
யுத்தத்தில் வல்லவர் மீட்பர் ஜெயிக்கிறார் - ஜெயம்

3. நம்பிக்கை தேவனே நன்மைகள் அளிப்பவர்
வார்த்தையை அனுப்பியே மகிமைப்படுத்துவார் - ஜெயம்

4. உண்மை தேவனே உருக்கம் நிறைந்தவர்
என்னை காப்பவர் உறங்குவதில்லையே - ஜெயம்

★ ★ ★

## நம்பிக்கையின் பாடல்கள்

### பாடல் - 5

அழகாய் நிற்கும் யார் இவர்கள்
திரளாய் நிற்கும் யார் இவர்கள்
சேனைத் தலைவராம் இயேசுவின் பொற்தளத்தில்
அழகாய் நிற்கும் யார் இவர்கள்

1. எல்லா ஜாதியார் எல்லா கோத்திரம்
எல்லா மொழியும் பேசும் மக்களாம்
சிலுவையின் கீழ் இயேசு இரத்தத்தால்
சீர்போராட்டம் செய்து முடித்தோர் – அழகாய்

2. வெள்ளை அங்கியை தரித்துக் கொண்டு
வெள்ளை குருத்தாம் ஓலைப் பிடித்து
ஆர்ப்பரிப்பார் சிங்காசனம் முன்பு
ஆட்டுக்குட்டிக்கே மகிமையென்று – அழகாய்

3. ஆட்டுக்குட்டிதான் இவர் கண்ணீரை
அற அகற்றி துடைத்திடுவார்
அழைத்துச் செல்வார் இன்ப ஊற்றுக்கே
அள்ளி பருக இயேசு தாமே – அழகாய்

★ ★ ★

### பாடல் - 6

பரலோகமே என் சொந்தமே
என்று காண்பேனோ
என் இன்ப இயேசுவை
என்றும் காண்பேனோ



1. வருத்தம் பசிதாகம்
மனந்துயரம் அங்கே இல்லை
வீண் கிரீடம் வாஞ்சிப்பேன்
விண்ணவர் பாதம் சேர்வேன் – பரலோகமே

2. சிலுவையில் அறையுண்டேன் இனி
நானல்ல இயேசுவே
அவர் மகிமையை
எனது இலட்சியமே – பரலோகமே

3. இயேசு என் நம்பிக்கையாம் இந்த
பூமியும் சொந்தமல்ல
பரிசுத்த சிந்தையுடன்
இயேசுவை பின்பற்றுவேன் – பரலோகமே

4. ஓட்டத்தை ஜெயமுடன்
நானும் ஓடிட அருள் செய்வார்
விசுவாச பாதையில்
சோராது ஓடிடுவேன் – பரலோகமே

5. பரமசுகம் காண்பேன்
பரன் தேசம் அதில் சேர்வேன்
இராபகல் இல்லையே
இரட்சகர் வெளிச்சமே – பரலோகமே

★ ★ ★

### பாடல் - 7

1. ஜோதி தோன்றும் ஓர் தேசமுண்டு
விசுவாசக் கண்ணால்காண்கிறோம்
நம்பிதா அழைக்கும் பொழுது

நாம் அங்கே வசிக்கச் செல்லுவோம்

பல்லவி

இன்பராம் ஈற்றிலே
மோட்சக்கரையில் நாம்
சந்திப்போம் அல்லேலூயா

2. அந்த வான் கரையில் நாம் நின்று
விண்ணோர் கீதங்களைப்பாடுவோம்
துக்கம் யாவும் அற்று மகிழ்ந்து
சுத்தரின் ஆறுதல் அடைவோம் – இன்ப

3. நம் பிதாவின் அன்பை நினைத்து
அவரில் மகிழ்ந்து பூரிப்போம் – இன்ப
மீட்பின் நன்மைகளை உணர்ந்து
அவரை வணங்கி துதிப்போம் – இன்ப

4. அங்கே நம் ரட்சகர் என்றென்றும்
ஆளுகை செய்து வீற்றிருப்பார்
துக்கம் நோய் சாவுகள் நீங்கிடும்
தேவன் நம் கண்ணீரைத் துடைப்பார் – இன்ப

5. தூதர் சூழ்ந்து நின்று பாடுவார்
கேட்டு நாம் யாவரும் மகிழ்வோம்
பக்தர் அங்கே முடி சூடுவார்
ஓர் முடி அங்குண்டு எனக்கும் –இன்

6. அந்த மோட்சகரை அடைந்து
வான் சேனையுடன் நாம் களிப்போம்
நம் தெல்லை யாத்திரை முடிந்து
விண்கிரீடத்தை நாம் தரிப்போம் – இன்



7. என் உற்றார் போய்விட்டார் முன் அங்கே
ஆ! பின் நான் மீளவும் சந்திப்பேன்
அவர் கூட்டத்தில் நான் விண்ணிலே
ஓய்வற்ற பேரின்பம் கொள்ளுவேன் – இன்ப

★ ★ ★

**பாடல் –8**

ஆனந்தமாய் இன்பக் கானான் ஏகிடுவேன்
தூய பிதாவின் முகம் தரிசிப்பேன்

**அனுபல்லவி**

நாளுக்கு நாள் அற்புதமாய்
என்னை தாங்கிடும்
நாதன் இயேசு என்னோடிருப்பார்.

1. சேற்றினின்றென்னைத் தூக்கி எடுத்து
மாற்றி உள்ளம் புதிதாக்கினாரே
கல்லான என் உள்ளம் உருக்கின கல்வாரியை
கண்டு நன்றியுடன் பாடிடுவேன் – ஆனந்

2. வாலிப நாளில் இயேசுவைக் கண்டேன்
வாஞ்சையுடன் என்னைத் தேடிவந்தார்
எதற்குமே உதவா என்னையும் கண்டெடுத்தார்
இயேசுவின் அன்பை நான் என் சொல்லுவேன் – ஆனந்

3. கர்த்தரின் சித்தம் செய்திட நித்தம்
தத்தம் செய்தே என்னை அர்ப்பணித்தேன்
இயேசு அல்லால் ஆசை இப்பூவில் வேறே இல்லை
என்றும் எனக்கவர் ஆதரவே – ஆனந்

4. உம்மைப் பின் சென்று ஊழியம் செய்து
உம்பாதம் சேர்ந்திட வாஞ்சிக்கிறேன்.
தாரும் தேவா ஏழைக்கு மாறாத உம்கிருபை
கண்பாரும் என்றும் நான் உம் அடிமை – ஆனந்

5. தேற்றிடுதே உம் வாக்குகள் என்னை
ஆற்றிடுதே உந்தன் சமூகமே
பெலத்தின் மேல் பெலனடைந்து நான் சேருவேன்
பேரின்ப சீயோனில் வாழ்ந்திடுவேன் – ஆனந்

★ ★ ★

## திருவிருந்து ஆராதனையின் பாடல்கள்

### பாடல் - 9

கர்த்தரின் பந்தியில் வா சகோதரா
கர்த்தரின் பந்தியில் வா

**அனுபல்லவி**

கர்த்தர் அன்பாய் சொந்த
ரத்தத்தைச் சிந்தின
காரணத்தை மனப்பூர்வமாய்
எண்ணி – கர்த்தரின்

1. ஜீவஅப்பம் அல்லோ கிறிஸ்துவின்
திருசரீரம் அல்லோ
பாவ மனங்கல்லோ – உனக்காய்ப்
பகிரப்பட்டதல்லோ
தேவ குமாரனின் ஜீவ அப்பத்தை நீ
தின்று அவருடன் என்றும் பிழைத்திட – கர்த்தரின்



2. தேவ அன்பைப் பாரு கிறிஸ்துவின்
சீஷர் குறை தீரு
பாவக் கேட்டைக் கூறு – ராப்போசன
பந்திதனில் சேரு
சாவுக்குரிய மா பாவமுள்ள லோகம்
தன்னில் மனம் வைத்து அன்னியன் ஆகாதே – கர்த்தரின்

3. அன்பின் விருந்தாமே – கர்த்தருடன்
ஐக்கியப் பந்தியாமே
துன்பம் துயர் போமே இருதயம்
சுத்தத் திடனாமே
இன்பம் மிகும் தேவ அன்பின் விருந்துக்கு
ஏது தாமதமும் இல்லாதிப்போதே வா – கர்த்தரின்

★ ★ ★

### பாடல் - 10

1. பலிபீடத்திலென்னைப் பரனே
படைக்கிறேனே இந்த வேளை
அடியேனைத் திருச்சித்தம் போல
ஆண்டு நடத்திடுவீர்

**பல்லவி**

கல்வாரியின் அன்பினையே
கண்டு விரைந்தோடி வந்தேன்
கழுவும் உம்திரு இரத்தத்தாலே
கறை நீங்க இருதயத்தை

2. நீரன்றி என்னாலே பாரில்
ஏதும் நான் செய்திட இயலேன்

சேர்ப்பீரே வழுவாது என்னை
காத்துமக்காய் நிறுத்தி – கல்வாரி

3. ஆவியோடாத்மா சரீரம்
அன்பரே உமக்கென்றும் தந்தேன்
ஆலயமாக்கியே இப்போ
ஆசீர்வதித்தருளும் – கல்வாரி

4. சுயமென்னில் சாம்பலாய் மாற
சுத்தாவியே அனல் மூட்டும்
ஜெயம் பெற்று மாமிசம் சாக
தேவா அருள் செய்குவீர் – கல்வாரி

5. பொன்னையும் பொருளையும் விரும்பேன்
மண்ணின் வாழ்வையும் வெறுத்தேன்
மன்னவன் இயேசுவின் சாயல்
இந்நிலத்தே கண்டதால் – கல்வாரி

★ ★ ★

## திருமுழுக்கு பாடல்கள்

### பாடல் – 11

1. நான் பாவச் சோற்றினிலே வாழ்ந்தேன்
நான் சாபத்திலே மாண்டேன்
எண்ணிலடங்கா பாவங்கள் போக்கி
ஏசென்னை மீட்டாரே

பல்லவி

என் நாவிலே புதுப்பாட்டுகள்
என்றென்றும் கவி தங்கிடும்



மா சந்தோஷம் மறுபிறப்பீந்து
மன இருள் நீக்கினார்

2. என் ஆத்தும மீட்பை அருமையாய்
இயேசாண்டவர் எண்ணினதால்
சொந்தம் தம் ஜீவனாம் இரத்தம் எனக்காய்ச்
சிந்தி இரட்சித்தாரே – என்

3. கார் மேகம் போல் என் பாவங்கள்
கர்த்தர் அகற்றினாரே
மூழ்கியே தள்ளும் சமுத்திர ஆழம்
தூக்கி எறிந்தாரே – என்

4. என் ஜென்ம கரும பாவங்கள்
எல்லாம் தொலைத்தாரே
மன்னித்து என்றும் மறந்துவிட்டாரே
மா பரமானந்தம் – என்

5. இரத்தாம்பரம் போல் சிவப்பான
இதய பாவங்களை
பஞ்சையும் போலவே வெண்மையுமாக்கி
தஞ்சம் எனக்கீந்தார் – என்

★ ★ ★

### பாடல் – 12

1. மகிழ்வோம் மகிழ்வோம் தினம் அக மகிழ்வோம்
இயேசு ராஜன் நம்சொந்தமாயினார்
இந்தப் பார்தலத்தின் சொந்தக்காரர் அவர்
எந்தன் உள்ளத்தின் சொந்தமானார்

**பல்லவி**

ஆ ஆனந்தமே பரமானந்தமே
இது மாபெரும் பாக்கியமே

2. சின்னஞ்சிறு வயதில்
என்னைக் குறித்து விட்டார்
தூரம் போயினும் கண்டுகொண்டார்
தமது ஜீவனை எனக்கும் அளித்து
ஜீவன் பெற்றுக் கொள் என்றுரைத்தார் – ஆ

3. எந்த சூழ்நிலையும் அவர் அன்பினின்று
என்னைப் பிரிக்காது காத்துக் கொள்வார்
என்னை நம்பி அவர் தந்த பொறுப்பதனை
அவர் வரும் வரை காத்துக் கொள்வேன் – ஆ

4. அவர் வரும் நாளினில்
என்னைக் கரம் அசைத்து
அன்பாய் கூப்பிட்டு சேர்த்துக் கொள்வார்
அவர் சமூகமதில் அங்கே அவருடனே
ஆடிப்பாடியே மகிழ்ந்திடுவேன் – ஆ

★ ★ ★

## ஆலய பிரதிஷ்டை பாடல்கள்

### பாடல் - 13

தேவனின் ஆலயமே, பரிசுத்த ஆலயமே
மகிமையின் ஆலயமே, நாமே அவ்வாலயமே

1. இயேசுவின் இரத்தத்தால் மீட்கப் பட்டோம்
அவருக்காய் கிரயமாய் கொள்ளப் பட்டோம்
தேவனின் ஆவியால் நிரப்பப்பட்டோமே நாம்



தேவப்பிள்ளைகளானோம், அவர்
சொந்த ஜனமானோம்

2. நாம் இனி நம்முடையவர்களல்ல
அவரே நம் சரீரத்தின் சொந்தமானார்
வஞ்சிக்கப்படாமல் தீட்டுப்படுத்தாமல்
பரிசுத்தம் காத்துக் கொள்வோம்
பரிசுத்த ஜாதியாக

3. கர்த்தருடன் என்றும் இசைந்திருப்போம்
அவருடன் ஒரே ஆவியாயிருப்போம்
ஆவியினாலும் சரீரத்தாலும் மகிமை
செலுத்திடுவோம் கர்த்தருக்கே என்றும்

4. கறை திரை இல்லா சபையாக
கற்புள்ள கன்னிகையைப் போல
இயேசுவுக்காக ஜீவிப்போமே என்றும்
அவர் சித்தம் செய்திடுவோம் மணவாட்டியாகிடுவோம்

5. இயேசுவின் வருகை நெருங்கிடுதே
அவர் பிரசன்னம் விரைந்தேகிடுதே
மகிமை மேல் மகிமை அடைந்திடுவோமே நாம்
மறுரூபமாகிடுவோம் மகிமையில் சேர்ந்திடுவோம்

★ ★ ★

### பாடல் - 14

இதோ மனுஷரின் மத்தியில் தேவாதி தேவனே
வாசஞ் செய்கிறாரே

1. தேவன் தாபரிக்கும் ஸ்தலமே
தம் ஜனத்தாரின் மத்தியிலாம்
தேவன் தாம் அவர்கள் தேவனாயிருந்தே
கண்ணீர் யாவையும் துடைக்கிறாரே – இதோ

2. தேவ ஆலயமும் அவரே
தூய ஒளி விளக்கும் அவரே
ஜீவனாலே தம் ஜனங்களின் தாகம் தீர்க்கும்
சுத்த ஜீவ நதியும் அவரே – இதோ

3. மகிமை நிறை பூரணமே
மகா பரிசுத்த ஸ்தலமதுவே
என்றும் துதியுடனே அதன் வாசல் உள்ளே
எங்கள் பாதங்கள் நிற்கிறதே – இதோ

4. சீயோனே உன் வாசல்களை
ஜீவ தேவனே நேசிக்கிறார்
சீர் மிகுந்திடு மெய் சுவிசேஷந்தனை
கூறி உயர்த்திடுவோம் உம்மையே – இதோ

5. முன்னோடியாய் இயேசுபரன்
மூலைக்கல்லாகி சீயோனிலே
வாசஞ் செய்திடும் உன்னத சிகரமதை
வாஞ்சையோடு நாம் நாடிடுவோம் – இதோ

★ ★ ★

## திருமணப் பாடல்கள்

### பாடல் – 15

ஏதேனில் ஆதிமணம்
உண்டான நாளிலே



பிறந்த ஆசீர்வாதம்
மாறாதிருக்குமே

1. இப்போதும் பக்தியுளோர்
விவாகம் தூய்மையாம்
மூவர் பிரசன்னமாவார்
மும்முறை வாழ்த்துண்டாம்

2. ஆதாமுக்கு ஏவாளை
கொடுத்த தந்தையே
இம்மாப்பிள்ளைக்கிப் பெண்ணை
கொடுக்க வாருமே

3. இரு தன்மையும் சேர்ந்த
கன்னியின் மைந்தனே
இவர்கள் இருகையும்
இணைக்க வாருமே

4. மெய் மணவாளனான
தெய்வ குமாரர்க்கே
சபையாம் மனையாளை
ஜோடிக்கும் ஆவியே

5. நீரும் இந்நாளில் வந்து
இவ்விரு பேரையும்
இணைத்து அன்பாய் வாழ்த்தி
மெய்பாக்கியம் ஈந்திடும்

6. கிறிஸ்துவின் பாரியோடே
எழும்பும் வரைக்கும்
எத்தீங்கில் நின்றும் காத்து
பேர் வாழ்வு ஈந்திடும் – ஆமென்

★ ★ ★

**பாடல் - 16**

ஆசீர்வதியும் கர்த்தரே ஆனந்தம் மிகவே
நேசா உதியும் சுத்தரே நித்தம் மகிழவே

**பல்லவி**

வீசிரோ வானஜோதி கதிரிங்கே
மேசியா என்மண வாளனே
ஆசாரியரும் வான் ராஜனும்
ஆசீர்வதித்திடும்

1. இம்மணமக்களோடென்றும்
என்றென்றும் தங்கிடும்
உம்மையே கண்டும் பின்சென்றும்
ஓங்கச் செய்தருளும்
இம்மையே மோட்சமாக்கும் வல்லவரே
இன்பத்தோடன் பாக்கி சூட்சமே
உம்மிலே தங்கித் தரிக்க
ஊக்கமருளுமே - வீசிரோ

2. ஒற்றுமையாக்கும் இவரை ஊடாக நீர் நின்றே
பற்றோடும் மீது சாய்ந்துமே பாரில் வசிக்கவே
வெற்றி பெற்றோங்கும் இவர் நெஞ்சத்திலே
வீற்றாளும் நீர் ஏக ராஜானாம்
ஏற்றவான் ராயர் சேயர்க்கே
ஒப்பாய் ஒழுகவே - வீசிரோ

3. பூதல ஆசீர்வாதத்தால் பூரணமாகவே
ஆதரித்தாளும் கர்த்தரே
ஆசீர்வதித்திடும்
மாதிரளாக இவர் சந்ததியார்
வந்தும்மை என்றும் பிரஸ்தாபிக்க



ஆதேவ கிருபை தீர்மானம்
ஆம் போல் அருளுமேன் - வீசிரோ

★ ★ ★

**பாடல் -17**

மணவாழ்வு புவி வாழ்வினில் வாழ்வு
மங்கள வாழ்வு வாழ்வினில் வாழ்வு
மணவாழ்வு புவி வாழ்வினில் வாழ்வு
மருவிய சோபன சுபவாழ்வு

1. துணைபிரியாது தோகையிம்மாது
சுபமண மகளிவர் இது போது
மணமுறை யோது வசனம் விடாது
வந்தனருமதருள் பெறவேது - நல்ல

2. ஜீவவிதயாபரா சிருஷ்டியதிகாரா
தெய்வீக மாமண அலங்காரா
தேவகுமாரா திருநெல்லையூரா
சேர்ந்தவர்க்கருள் தராதிருப்பீரோ - நல்ல

3. குடித்தன வீரம் குணமுள்ள தாரம்
கொடுத்துக் கொண்டாலது சமுசாரம்
அடக்க மாசாரம் அன்பு உதாரம்
அம்புவி தனில் மனைக் கலங்காரம் - நல்ல

4. மன்றல் செய்தேவி, மணாளனுக்காவி
மந்திரம் அவற்குறை மேதாவி
அன்றியிப் பூவி லமிர்த சஞ்சீவி
அவளையில்லாதவனொரு பாவி - நல்ல

## IMPORTANT PHONE NOS.

| S.NO. | NAME | PHONE NO. | MOBILE NO. |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

# விண்ணக அப்பம்

அன்பார்ந்தவர்களே,

போதகர்.கிறிஸ்டோபர் அவர்களின் புத்தகங்கள் படிக்க இயலாதோருக்காகவும், பார்வையற்றவர்களுக்காகவும் ஆடியோ வடிவில் வெளியிடப்படுவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டுவருகின்றன. போதகர். கிறிஸ்டோபர் அவர்களின் புத்தகங்கள் ஆடியோ வடிவில் விரைவில் கிடைக்கப் பெற உங்கள் ஜெபத்தினாலும், கரத்தினாலும் தாங்குங்கள்.

அலுவலக தொடர்பு எண்: *94888 56323*

இப்படிக்கு

**Pr.** அலெக்ஸ் தினகரன்